தரம் 5 – 11 வரை

எண்: 06 எழுத்து: 01
ஜனவரி 2012

AHARAM
அகரம்

Des: Sinan

2011 நிகழ்வுகள்... பதிவுகள்...

30/-

மாதாந்த சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஊடகங்களில் நாமும் சங்கமிப்போம்; நலன் புரிவோம்!

இன்று விஞ்ஞான, தொழிநுட்ப, தொடர்பாடல் உலகில் நன்மைகள் கிடைப்பது போலவே தீமைகளும் மலிந்து கிடக்கின்றன. தீமைகளைக் கண்டு அஞ்சும் பலர் நன்மையின் பக்கம் போகவே பயப்படுகின்றனர். பெற்றோர் தம் பிள்ளைச் செல்வங்களை பாதுகாப்பதற்குப் பெருமுயற்சி செய்யப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ள திருடனின் கையில் கிடைத்த கத்தி போல விஞ்ஞான தொழிநுட்ப தொடர்பாடல் வளர்ச்சி தீமைகளுக்குத் துணைபோவது கவலையளிக்கிறது. ஆனால், ஆச்சரியமான மாற்றங்களையும் நன்மைகளையும் அள்ளித் தருவதிலும் அவை பின்னிற்கவில்லை.

கடந்த வருடம் உலகில் நிகழ்ந்த பல மாற்றங்களுக்குப் பக்கபலமாய் அமைந்தவை சமூக வலைத்தளங்களே. பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத்தலங்கள் டியூனீசியா, எகிப்து, லிபியா போன்ற வட ஆபிரிக்க நாடுகள்; பஹ்ரைன், சஊதி அரேபியா போன்ற மத்திய கிழக்கு நாடுகள்; கிரேக்கம், ஸ்பெய்ன், இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா என அனைத்து நாடுகளிலும் மக்களை ஒன்றிணைப்பதற்குப் பயன்பட்டன.

நீங்களும் இவ்வாறான நன்மைகளுக்கு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தலாம். உங் களின் பாடசாலை நிகழ்வுகள், சமூக நிகழ்வுகளை பிறரோடு பகிர்ந்து கொள்ளுங்கள். பிறருக்குத் தெரியப்படுத்துங்கள். நிகழ்வுகளைப் புகைப்படத்தோடு அனுப்புங்கள். நாம் பதிவேற்றுகிறோம். அகரம் பேஸ்புக் பக்கத்தில் நீங்களும் எழுதலாம். சிறிய கவிதைகள், சிறிய கட்டுரைகள், உங்கள் ஊரின் சிறப்புக்கள்... முதலானவற்றை அனுப்புங்கள். மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கவும் சிந்தனைத் திறனை மேம்படுத்தவும் நாம் உங்களுக்கு களமமைக்கிறோம்.

www.facebook.com/aharamJmf 071 939 2121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்

எண்: 06 ஜனவரி 2012 எழுத்து: 01

பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எஸ்.எம். அனீஸ்

சந்தா விபரம்
1 வருட சந்தா 550 /-
6 மாத சந்தா 275 /-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: *aharamipc@gmail.com*
www.facebook.com/aharamJmf

உள்ளே...

பிரமிப்பூட்டும் கருந்துளைகள் 04

23

13

மாணவர்களின் இலட்சியப் பயணத்தின் இடையூறுகள் 18-19

புத்தாண்டுத் திட்டம் புதுப் பொலிவு பெற... 20-22

2011 நிகழ்வுகள் பதிவுகள் 25-30

பசுமை அகரம் 39

சிறந்த ஆரம்பம் சிறப்பான முடிவையே தரும் 48

அரேபியரின் தத்துவஞானி அல்கின்தீ 40

08

41

பாடத்திட்டம்

வரலாறு 15 | தமிழ் 31

புலமைப் பரிசில் 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையச்சமே மிகச் சிறந்த கட்டுச் சாதனம்

மாணவச் செல்வங்களே!

புதியதொரு கல்வியாண்டில் நுழைந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை எவ்வாறு ஆரம்பிக்க சிந்திக்கின்றோம் என்பதை ஒருமுறை மீட்டிப் பாருங்கள். பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டங்கள் பரீட்சைப் புள்ளிகளுக்காகப் பாடங்களைப் படிக்கின்ற, மனனமிட்டுக் கொள்கின்ற கலாசாரத்தைத்தான் நாடு முழுவதும் தோற்றுவித்துள்ளது. இது ஆபத்தான கலாசாரம்!

இத்தகைய சூழலில் கல்வியறிவை மேம்படுத்தி பயனுள்ள மனிதநேயமாக வாழ நாம் உறுதி கொள்ள வேண்டும். படைப்பாளனாகிய அல்லாஹ்வை அறிந்து அவனுக்குக் கீழ்ப்படிந்து செயற்படும் இறையடியானாக மாற வேண்டும். ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு, நேர்மை, அர்ப்பணம் போன்ற மனித மாண்புகள் அறிவின் வெளிப்பாடாக அமைய வேண்டும். இத்தகைய குண நலன்களை உருவாக்கும் அத்திபாரமே இறையச்சம் (தக்வா) ஆகும்.

"அல்லாஹ்வை அஞ்சுங்கள்; அல்லாஹ் உங்களுக்கு கற்றுத்தருவான்."

இதுதான் அறிவு ஞானத்தைப் பெறுவதற்கான அடிப்படைத் தகைமை. இந்தத் தகைமையை இழக்கின்றபோது அறிவு என்பதால் கருதப்படுகின்ற ஒழுக்கம், பண்பாடு என்பவை சிதைந்து வெறும் தகவல்களை மூளையில் நிரப்பிய மனிதர்களைத்தான் காண முடியும். தனது நலனில் மட்டுமே கவனம் செலுத்துகின்றவர்களைத்தான் அது உருவாக்கும். பிற மனிதர்களின் இடர், துன்பம் இவனை மகிழ்ச்சியடையச் செய்யும். அவற்றில் அவனுக்கேதும் பயன் கிட்டுமாக இருந்தால் மட்டுமே அதில் சம்பந்தப்படுவான். இல்லையெனில் தூர விலகிச் சென்று விடுவான்.

இது வெறும் தகவல்களை சுமந்து கொண்டு வாழுவோரின் நிலை. உண்மையில் அறிவு, இறைவனை அறிந்து கொள்ள வழிகாட்டும். அவனது படைக்கும் ஆற்றல், வல்லமைகளை கற்றுத் தரும். அவனது விருப்பு வெறுப்புகளை புரியச் செய்யும். அல்லாஹ்வின் எதிர்பார்ப்பை இவ்வுலகில் நிறைவேற்றுவதற்கு தொடர்ந்து தூண்டிக் கொண்டும் உத்வேகம் அளித்துக் கொண்டுமிருக்கும்.

அல்லாஹ் அருளியிருக்கின்ற அருள் வளங்கள் அனைத்தையும் வீணடிக்காது பயன்படுத்த வேண்டுமென்றால் அதற்கு இறையச்சம்தான் அடிப்படை அம்சமாகும்.

காலம், நேரம், செல்வம், ஆரோக்கியம், வாய்ப்பு, சந்தர்ப்பம், இளமை, இலவசக் கல்வி என நீண்டு செல்லும் இவ்வனைத்தும் அல்லாஹ்வின் பேரருள்களின் விளைவாய் கிட்டியவையாகும். இவை பயனுள்ளதாக பயன்பட வேண்டுமென்றால் இறையச்சம் இன்றி சாத்தியமாகாது. இறையச்சம் இல்லாதபோது பொடுபோக்கு, கவனயீனம் என்பவை செல்வாக்கு செலுத்தி பாதையின் திசையையே மாற்றிவிடும்; இலக்கு பிழைத்து விடும்.

"நிச்சயமாக அல்லாஹ்வை அஞ்சுகின்றவர்கள் அறிஞர்களே" என அல்குர்ஆன் பொழியும் சிந்தனை எத்துணை ஆழமானது என்ற சிந்தனை கொள்ளுங்கள். புதிய கல்வியாண்டு மறுமலர்ச்சி ஆண்டாக அமையட்டும். புத்தாக்க முயற்சிகளுக்கு வழி சமைக்கட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

சுவனத்தை இழந்த துயரம்



அதற்கு இப்லீஸ் கூறினான், "என்னை நீ வழிகேட்டில் ஆழ்த்தியதன் காரணத்தால், நிச்சயமாக நானும் இம்மனிதர்களை உன்னுடைய நேரான வழியில் செல்ல விடாமல் தடுப்பதற்காக வழிமறித்து தருணம் பார்த்துக் கொண்டிருப்பேன். பிறகு அவர்களின் முன்னாலும் பின்னாலும் வலப் புறமாகவும் இடப் புறமாகவும் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்வேன். மேலும், அவர்களில் அதிகமானோரை நன்றி செலுத்துவோராக நீ காணமாட்டாய்." (அல்அஃராப்: 16-17)

இவ்வாறு இப்லீஸ் அல்லாஹ்விடம் சூளுரைத்தான். அவனைப் பிடித்துக் கொண்ட பெருமை எனும் நோய் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்ற பணிவான நல்ல உணர்வை ஏற்படுத்துவதற்குப் பதிலாக மனிதனை வழிகெடுக்க வேண்டும் என்ற அகந்தை உணர்வையும் தீய சிந்தனையையும் அவனிடத்தில் தூண்டியது. அப்போது அல்லாஹ் கூறினான்.

"நீ இழிந்தவனாகவும் விரட்டப்பட்டவனாகவும் இங்கிருந்து வெளியேறிவிடு."

(அல்அஃராப்: 18)

இந்த நிகழ்வின் பின்னர் முதல் மனிதரையும் அவரது மனைவியையும் அல்லாஹ் பேரின்பச் சோலையில் வாழ வைத்தான். நீரருவிகளும் தேனாறும் பாலாறும் ஊற்றெடுத்து ஓடுகின்ற சுவனத்துச் சோலை அது. நீண்ட நிழல் தரும் மரங்கள். சுவைத்திடும் ஒவ்வொரு தருணத்திலும் வித்தியாசமாய் சுவை தரும் கனிகள். அதிக வெப்பமும் கடும் குளிரும் அற்ற சாந்தமான காலநிலை கொண்ட வசீகரமும் சுதந்திரமும் நிறைந்த சோலை. அதில்தான் முதல் மனிதர் தன் துணைவியோடு இன்பமாய் வாழ அதிஷ்டம் பெற்றார். அதுதான் மனிதனின் தாயகமாய் இருக்கும் என்பதை கருணையாளன் அல்லாஹ் உறுதி செய்தான்.

ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) தன் துணைவியோடு சுவனத்தில் வாழ்வதை இப்லீஸ் விரும்பவில்லை. அவர்களை அங்கிருந்து வெளியேற்றத் திட்டமிட்டு சூழ்ச்சி செய்தான். அல்லாஹ், ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை சுவனத்தில் வாழச் செய்து அங்கிருக்கும் அனைத்தையும் உங்களுக்கு அனுபவிக்க அனுமதி வழங்கினான். ஒரே ஒரு மரத்தைக் காட்டி இந்த மரத்தை நீரும் உமது மனைவியும் நெருங்கக் கூடாது என்று தடை செய்திருந்தான்.

நெருங்கவே வேண்டாம் என்று தடுக்கப்பட்ட மரத்தை நெருங்க வைத்து அதை சுவைக்க வைப்பதுதான் இப்லீஸின் சதித் திட்டமாக அமைந்தது. இப்லீஸ் தன் இலக்கில் குறியாய் இருந்தான். மனிதனை வழிகெடுக்க வேண்டுமென்பதுதான் அவனது இலக்கு. மனிதனில் செல்வாக்கு செலுத்தும் ஆசையை பேராசையாக மாற்ற வேண்டும் என்று தீர்மானித்தான். ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கும் அவரது துணைவியாருக்கும் நலம் நாடுகின்றவனைப் போல் நடித்தான். மெதுமெதுவாக அவர்களிருவருக்கும் தூண்டலை ஏற்படுத்தினான்.

நீங்கள் ஏன் அந்த மரத்தை நெருங்கக் கூடாது? அந்த மரத்தை நீங்கள் நெருங்கி விட்டால் வானவர்களாகவோ அல்லது இந்த சுவனத்தில் நிரந்தரமாகவோ வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவீர்கள். அதனால்தான் இரட்சகன் அம்மரத்தை நீங்கள் இருவரும் நெருங்கக் கூடாது என்று தடை விதித்துள்ளான். எனவே, நெருங்கி சுவைத்திடுங்கள் என்று உள்ளத்தில் ஆசையூட்டினான். சுவனத் தாயகத்தில் நிரந்தரமாக உங்களிருவரையும் வாழ வைக்கும் நோக்கம் அல்லாஹ்வுக்கு இல்லை என்ற மோசமான அபிப்பிராயத்தைத்தான் இப்லீஸ் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்), ஹவ்வா (அலைஹிஸ்ஸலாம்) ஆகியோரிடத்தில் விதைத்தான்.

ஷைத்தானின் ஆசையூட்டும் வார்த்தைகள் அல்லாஹ்வின் அறிவுறுத்தலை மறக்கடிக்கச் செய்து விட்டது. இருவரும் மரத்தை நெருங்கி அம்மரத்தின் கனியை சுவைத்து விட்டனர். ஷைத்தான் தன் சூழ்ச்சியில் வெற்றி பெற்றான். மனிதன் சுவனத்தை இழப்பதற்கு முன்னால் வெட்கித் தலைகுனிந்து அவமானப்பட்டுப் போனான். ஆமாம் அவர்களது வெட்கத்தலங்கள் வெளிப்பட்டன. அதனை மறைக்க முயற்சித்தனர். பின்னர் சுவனத்து இலைகள் கொண்டுதான் அவர்கள் அதனை மறைத்தனர்.

மரத்தை நெருங்க வேண்டாம் என்பதும் ஷைத்தான் தெளிவான எதிரி என்பதும் உங்களுக்கு ஏற்கனவே அறிவூட்டப்பட்ட வழிகாட்டல் அல்லவா என்பதை அல்லாஹ் மீண்டும் தெளிவாக எடுத்துரைத்தான். ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் அவரது துணைவியரும் அல்லாஹ்விடம் மன்றாடி மன்னிப்புக் கோரி நின்றனர்.

மனிதன் முதல் தவறு என்பதாலோ என்னவோ மனிதன் தன்னை மீண்டும் சுத்தப்படுத்தி தூய்மையான நிலையில் மீண்டு வருமாறு கட்டளையிட்டு அனைவரையும் பூவுலகுக்கு அனுப்பி வைத்தான். அனுப்புகின்றபோது *"நீங்கள் அனைவரும் இங்கிருந்து இறங்கி விடுங்கள். பிறகு உங்களுக்கு என்னிடமிருந்து நேர்வழிகாட்டல் கிடைக்கும். அப்போது யார் எனது நேர்வழிகாட்டலைப் பின்பற்றுகின்றார்களோ அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள். அன்றி, யார் (அதை) ஏற்றுக் கொள்ள மறுத்து, எம்முடைய வசனங்களைப் பொய்யென்று கூறுகின்றார்களோ அவர்கள்தாம் நரகத்திற்குரியவர்கள்; அவர்கள் அதிலேயே என்றென்றும் வீழ்ந்து கிடப்பார்கள்."*

(அல்பகரா: 38-39)

"மேலும், ஆதமே! நீரும் உம்முடைய மனைவியும் இச்சுவனத்தில் தங்கியிருங்கள்! நீங்கள் விரும்பிய இடத்தில் விரும்பியதைப் புசியுங்கள்! ஆனால் இம்மரத்தின் அருகில் நெருங்காதீர்கள்! அவ்வாறு நெருங்கினால் நீங்கள் இருவரும் அக்கிரமக்காரர்களில் சேர்ந்து விடுவீர்கள்."

"ஆனால் அவ்விருவரை விட்டும் பரஸ்பரம் மறைந்திருந்த அவர்களின் வெட்கத்தலங்களை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக ஷைத்தான் அவர்களின் உள்ளங்களில் ஊசலாட்டத்தை ஏற்படுத்தினான். மேலும் இவ்வாறு கூறினான்; உங்கள் இறைவன் இம்மரத்தின் அருகே செல்லக் கூடாது என்று உங்கள் இருரையும் தடுக்கக் காரணம் நீங்கள் இருவரும் வானவர்களாகி விடக்கூடாது அல்லது உங்களுக்கு நிரந்தர வாழ்வு கிடைத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். மேலும் அவன் அவர்களிடம் சத்தியம் செய்து கூறினான்; நான் உங்கள் இருவருக்கும் உண்மையான நலம் நாடுவேனாவேன். இவ்வாறு அவ்விருவரையும் ஏமாற்றி படிப்படியாக தன் வசப்படுத்தினான். கடைசியில் அவர்கள் அம்மரத்தின் கனியைச் சுவைத்ததும் அவர்களின் வெட்கத்தலங்கள் பரஸ்பரம் அவர்களுக்கு வெளிப்பட்டு விட்டன. பிறகு அவர்கள் தங்கள் உடல்களை சுவனத்து இலைகளால் மூடிக் கொள்ளலாயினர். (அப்போது) அவர்களின் இறைவன் அவர்களை அழைத்துக் கூறினான். இம்மரத்தின் அருகில் செல்வதை விட்டும் உங்களிருவரையும் நான் தடுக்கவில்லையா? மேலும் ஷைத்தான் உங்களின் வெளிப்படையான பகைவன் என்று நான் உங்களுக்கு கூறவில்லையா?"

(அல்பகரா: 16-25)

மாணவ மணிகளே,
உங்கள் அபிமான அகரம் இதழை நீங்கள் வாசித்துப் பயன்பெறுவது போன்று உங்கள் நண்பர் நண்பியரும் வாசித்துப் பயன்பெற வேண்டாமா?

அகரம் மாணவர் இதழை
உங்கள் நண்பர்களையும்
வாசிக்கத் தூண்டுங்கள்;
அதன் வாசகர் ஆக்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

தூய எண்ணமே செயற்பாடுகளின் அடிப்படை

عَنْ أَمِيْرِ الْمُؤْمِنِيْنَ أَبِيْ حَفْصٍ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ:

قَالَ سَمِعْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ: إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَى (متفق عليه)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"செயற்பாடுகள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொரு மனிதனும் அவன் நாடியதையே அடைந்து கொள்வான்." (அல்புகாரி, முஸ்லிம்)

எமது அன்றாட வாழ்க்கையில் உள்ளத்திற்கும் அதில் ஊற்றெடுக்கும் எண்ணங்களுக்கும் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், நாம் செய்கின்ற அனைத்து செயற்பாடுகளும் எமது உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களுக்கு ஏற்பவே வெளிப்படுகின்றன. அதற்கேற்பவே மறுமையில் கூலியும் கிடைக்கும். எமது உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களே எம்மை அல்லாஹ்வோடு நெருக்கத்தை ஏற்படுத்தி அவனது அடிமை என்ற உணர்வில் வாழ வைக்கக் கூடியதாக அமைந்துவிடும்.

ஸஹாபிகள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு மேற்கொண்ட வரலாற்று நிகழ்வான ஹிஜ்ரத் நிகழ்வோடு இந்த ஹதீஸ் தொடர்புபடுகிறது. அவ்வாறு ஹிஜ்ரத் மேற்கொண்டவர்களுள் ஒருவர் மதீனாவிலுள்ள ஒரு பெண்ணைத் திருமணம் முடிப்பதற்காகவே அவர்களோடு சேர்ந்து பயணம் செய்தார். இதனை சுட்டிக்காட்டித் திருத்தி முஸ்லிம்களுக்கு இந்த மகத்தான செய்தியைச் சொல்லி படிப்பினை வழங்குவதனூடாக அவர்களை தூய்மையான மனிதர்களாக மாற்றுவதற்காகவே நபியவர்கள் இதனைக் குறிப்பிட்டார்கள்.

இந்த ஹதீஸின் தொடரில் நபியவர்கள், "யார் அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் ஹிஜ்ரத் செய்தாரோ அவர் அதற்கான கூலியைப் பெற்றுக் கொள்வார். யார் உலக விடயங்களை இலக்காகக் கொண்டு ஹிஜ்ரத் மேற்கொண்டாரோ அவர் அதனை அடைந்து கொள்வார்" எனக் குறிப்பிட்டார்கள். எந்த செயலைச் செய்த போதிலும் அதற்கான கூலியை அல்லாஹ்விடம் மாத்திரம் எதிர்பார்க்கின்ற இஹ்லாஸ் எனப்படும் தூய்மையான எண்ணம் எமது உள்ளத்தில் ஆழப் பதிந்திருத்தல் அவசியம் என்பதை நபியவர்கள் கற்றுக் கொடுத்தார்கள். மேலும் எத்தகைய நற்செயல்களை செய்தபோதிலும் உள்ளத்தில் இஹ்லாஸ் இல்லாதபோது எதிர்பார்ப்புகள் அனைத்தும் இவ்வுலகில் நிறைவுற்று மறுமையில் எந்த நன்மையையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விடும்.

மாணவர்களாகிய நாம் கால் எடுத்து வைத்திருக்கும் கல்விப் பயணத்தில் எதிர்காலம் தொடர்பான எண்ணங்களைப் புதுப்பித்து தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இதுவரை காலமும் நாம் கற்றுவந்த கல்வியின் இலக்கு சிறந்த பெறுபேறுகளைப் பெற்று அதன் ஊடாக உயர் பதவிகளை அடைய வேண்டும் என்பதும் எமது வாழ்க்கை வசதியுள்ளதாக மாறி சமூகத்தில் புகழோடும் உயரிய ஸ்தானத்திலும் வாழ்ந்து மரணிப்பதாகவும் இருந்திருக்கலாம். உண்மையில் இந்த இலக்கினை எமது மனதின் ஆழத்தில் விதைத்து அதற்கான முயற்சிகளை செய்கின்றபோது அதன் பெறுபேறுகளை நாம் வாழ்கின்ற காலத்திலேயே கண்டுவிடலாம். அதற்கான எந்தப் பெறுமானமும் மறுவுலக வாழ்வில் கிடைக்கப் பெறாது.

எனவே, நாம் கற்கின்ற கல்வி மூலம் அல்லது நாம் பெற்றிருக்கின்ற ஆற்றல்கள் மூலம் அல்லாஹ்வின் மார்க்கத்தை இம்மண்ணில் நிலைத்தோங்கச் செய்வதற்கு அர்ப்பணிப்பதென்ற தூய எண்ணத்தை உள்ளத்தில் வரவழைப்போம்.

நபியவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் உங்களது உடலையோ வெளித்தோற்றத்தையோ பார்ப்பதில்லை. மாற்றமாக அவன் உங்களின் உள்ளங்களையே பார்க்கிறான்."

ஆகவே, எமது உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களையும் எதிர்பார்ப்புகளையும் ஒரு கனம் மீள் பார்வை (முஹாஸபா) செய்து அதனை முற்றிலும் தூய்மையானதாக மாற்றிக்கொள்ள முயற்சிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk







பிரமிப்பூட்டும் கருந்துளைகள்

பிரம்மாண்டமான இப்பிரபஞ்சத்தின் அற்புதங்களில் அதிகமாக மனிதனின் கவனத்தை ஈர்த்துள்ள விடயம் விண்வெளியில் குவிந்து கிடக்கும் பேரற்புதங்கள் ஆகும். 20ம் நூற்றாண்டில் விண்வெளியில் கண்டுபிடிக்கப்பட்ட அதிசயங்களில் கருந்துளைகள் பிரமிக்கத்தக்கவை யென விண்வெளி ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதனால்தான் கருந்துளை என்பது வான் பௌதிக விஞ்ஞானிகளின் (Astro Physics Scientists) புதிய சிந்தனை என்று கூறப்படுகிறது. இத்தகைய கருந்துளைகள் இறை வல்லமைக்குச் சாட்சியம் கூறுகின்றன.

விண்ணில் காணப்படுகின்ற Black Holes எனும் கருந்துளைகள் மிகப் பிரம்மாண்டமான ஈர்ப்புச் சக்தியைத் தம்மகத்தே கொண்டுள்ள ஒரு வகை வான்பொருட்களாகும். Black என்பது இருட்டு, கருமை, வர்ணமே இல்லாதது என்று பொருள்படுகிறது. அதேபோன்று Hole என்பது துளை, வெறுமை, பள்ளம் என்று அர்த்தப்படுகிறது. இவை இரண்டையும் சேர்த்தே Black Hole (கருந்துளை) என்று அழைக்கிறோம்.

ஒளியை வெளிவிடாது கருமையாக இருப்பதனாலும் மின்காந்த அலைகளையும் ஒளியலைகளையும் ஏனைய விண் பொருட்களையும் இழுத்து விழுங்கிக் கொள்ளும் புதைகுழிகள் அல்லது பெருந்துளைகள் போன்று செயற்படுவதாலும் இவை கருந்துளைகள் எனப்படுகின்றன.

விண்ணில் மிதக்கும் விண்கற்கள், வாயுக்கள், தூசுப் படலங்கள், கதிர்கள், கிரகங்கள் போன்ற வற்றையும் ஈர்த்துக் கொள்ளும் அபார சக்தி படைத்தவையே கருந்துளைகள். அவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் செல்லும் பிரம்மாண்டமான நட்சத்தி ரங்கள் மற்றும் வால் நட்சத்திரங்களை அவை உள்ளே ஈர்த்துக் கொள்கின்றன. சில கருந்துளை கள் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களுக்கு நிகரான சக்தியைக் கொண்டுள்ளன. கருந்துளை என்பது அவ்வளவு பிரம்மாண்டமான சக்தியைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், அதற்குள் என்ன நடக்கின்றது என்பது இன்னும் அறியப்படாத புதிராக உள்ளது.

1915ம் ஆண்டு பிரபல விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டைன் முதற் தடவையாக விண்வெளியில் இவ்வாறானதொரு பகுதி இருக்கும் என தனது கருதுகோளை முன்வைத்தார். அத்தோடு கருந்து ளைகள் ஒளி, வாயு, திண்மப் பொருள்கள் என அனைத்தையும் உள்ளிழுத்துக் கொள்ளும்; எனவே, அவற்றின் அடர்த்தியும் கனதியும் மிக அதிகமாக இருக்கும் என்றும் விளக்கினார். இக்கூற்றை ஜேர்மனிய வானியலாளரான Karl Schwarzschild என்பவர் 1916ல் ஆராய்ந்து நிரூபித்தார்.

கருந்துளைகளின் உருவாக்கம்

விண்வெளியில் காணப்படும் நட்சத்திரங்கள் தம்மிடம் எரிபொருளாக பெருமளவு ஹைட்ரஜனையும் சிறிதளவு ஹீலியத்தையும் கொண்டுள்ளன. இவற்றின் மூலம் இந் நட்சத்திரங்களின் உட்பகுதியில் சதாவும் நிகழ்ந்து கொண்டிருக்கும் Nuclear Reaction அதாவது, ஹைட்ரஜன் அணுக் கள் ஹீலியம் அணுக்களாக மாற்றமடையும் செயற்பாட்டின் மூலம் இந் நட்சத்திரங்களிலிருந்து வெளிச்சமும் பெருமளவில் மின்காந்த வெப்பக் கதிர்களும் உருவாகின்றன (Electro magnetic Radiation). அவை பல ஆயிரக்கணக் கான கிலோ மீட்டர்கள் வரை தீச்சுவாலைகளாகப் பரவிச் செல்கின்றன.

இந் நட்சத்திரங்களின் எரிபொருள் தீர்ந்து உறுதியற்றுப்போய் தமது ஆயுளின் இறுதிக் கட்டத்தை அடையும்போது அவற்றின் அடர்த்தி அதிகரித்து உள் ஈர்ப்பு விசையாற்றல் பன்மடங்கு பெருகிவிடும். எனவே, அவை உட்பகுதியை, மையப்பகுதியை நோக்கி நாலா புறமிருந்தும் இடிந்து விழ ஆரம்பிக்கின்றன. இவ்வாறு எல்லாப் பகுதிகளிலிருந்தும் மையப் பகுதியை நோக்கித் திரண்டு, இடிந்து விழும்போது உடு கடுமை



யாக இறுக்கமடைகிறது. பின்னர் அது படிப்படியாக சிவப்பு நிறமாகி, பின்னர் சற்று வெண்மையாகி அதன் பின்பு கறுப்பு நிறமாகி இறுதியில் கருந்துளையாக மாறுகின்றது.

சூரியனைவிட 3 மடங்கு திணிவுடைய உடுக் கள் மாத்திரமே இறுதிக் கட்டத்தில் கருந்துளை களாக மாறுகின்றன. அதனை விடவும் திணிவில் குறைந்தவை வெண் குள்ள உடுக்களாக (White Dwarf) அல்லது நியூத்திரன் உடுக்களாக (Neutron Stars) மாற்றமடைகின்றன. உடுக்களுக்கு இடையில் உள்ள Interstellar gas என்ற வாயுக்கள் ஒன்று திரண்டு உள்நோக்கி இறுகுவதினாலும் மிகப் பிரம்மாண்டமான கருந்துளைகள் உருவாகுவதாகவும் வானியலாளர்கள் கருதுகின்றனர்.

நட்சத்திரங்களின் எரிபொருள் தீர்ந்து, அவற்றின் ஒளி மறைந்து, இறுதியில் அவை கருந் துளையாக மாறும் என்ற விஞ்ஞானத்தின் நவீன செய்தியை அல்குர்ஆன் பல நூறு வருடங்களுக்கு முன்பே அழகாகக் கூறிவிட்டது.

"நட்சத்திரங்கள் மறையுமிடங்களின் மீது நான் சத்தியம் செய்கின்றேன். நீங்கள் அறிந்து கொண்டால் இது மகத்தானதொரு சத்தியமென் பதை விளங்கிக் கொள்வீர்கள்." (56: 75, 76)

கருந்துளையின் அபார ஈர்ப்பு விசையிலிருந்து எந்தப் பொருளும் தப்பித்துச் செல்ல முடியாது. ஒரு பொருள் கருந்துளையின் ஈர்ப்பு விசையிலிருந்து தப்பிக்க அடைய வேண்டிய தப்புதல் வேகமானது (Escape Velocity) ஒளியின் வேகத்தையும் மிஞ்சி விடும். எமது புவியீர்ப்பு விசையைத் தாண்டி ஒரு பொருள் விண்ணை நோக்கிச் செல்ல வேண்டுமாயின், வினாடிக்கு 11 கி.மீ. வேகத்தில் செல்ல வேண்டும். தற்போது செலுத்தப்படும் ரொக்கெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுகள் இந்த வேகத்திலேயே விண்ணில் ஏவப் படுகின்றன. அதேபோன்று கருந்துளையின் ஈர்ப்பு விசையிலிருந்து ஒரு பொருள் வெளியேற அதன் ஈர்ப்பு விசையையும் விட அதிகூடிய சக்தியைப் பெற வேண்டும்.

பிரபஞ்சத்தில் அதிகூடிய வேகத்தில் பயணிப்பது ஒளி. (ஒளியை விடவும் Neutrinos வேகமாகப் பயணிப்பதாக மிக அண்மையில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்) ஒளி வினாடிக்கு 3 இலட்சம் கி.மீ. வேத்தில் பயணிக்கிறது. கருந்துளையின் ஈர்ப்பு விசையும் வினாடிக்கு 3 இலட்சம் கி.மீ. என்ற வேகத்தில் உள்ளது. எனவே கருந்துளையின் ஈர்ப்பு விசை அளவும் ஒளி பயணிக்கும் வேகமும் சமமாக உள்ளதால் ஒளியால் கூட கருந்துளையிடமிருந்து தப்பிக்க முடியாது.

கருந்துளைகளைக் கண்டறிவது எவ்வாறு?

பூமியில் இருந்தவாறு எவ்வாறு கருந்துளைகளைப் பார்க்க முடியும் என்ற கேள்வி உங்களிடம் எழுந்திருக்கக் கூடும். பூமியில் இருந்தோ நேரடி ஒளியியல் தொலைகாட்டிகளின் ஊடாகவோ அல்லது ரேடியோ தொலைகாட்டிகளின் ஊடாகவோ நேரடியாக கருந்துளைகளைப் பார்க்க முடியாது. ஏனென்றால் அவை கருமையாகவும் பிரகாசமற்றும் இருப்பதனாலாகும்.

கருந்துளைகளை நாம் கண்களால் காண முடியாது போனாலும் அவற்றின் நிகழ்வெல்லைக்கு (Event Horizon) அப்பால் இருக்கும் பிற நட்சத்திரங்கள், விண் பொருட்கள் போன்றவற்றின் துணையுடன் கருந்துளைகளின் இருப்பிடத்தைக் கண்டுகொள்ளலாம். உதாரணமாக; விண்மீன் கூட்டங்கள் கருந்துளையின் ஈர்ப்புக்கு உட்பட்டு அதன் மையத்தைச் சுற்றிவரும்போது கண்டுகொள்ளலாம். சிலபோது, கருந்துளைகள் அண்டவெளியில் காணப்படும் விண்பொருட்களையும் தூசுப் படலங்களையும் கவர்ந்து ஈர்த்தெடுக்கும்போது அவை அதி வேகத்தில் கருந்துளையைச் சுற்றி உள்ளே செல்லும்போது வெப்பநிலை அதிகரிப்பதால் பெருமளவு X கதிர்வீச்சுகள் வெளிப்படுகின்றன. இதன்போது தொலைநோக்கிகளால் இக்கதிர்களைக் கண்டு கருந்துளைகளின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

(தொடரும்...)

2011ம் ஆண்டு நோபிள் பரிசும் பெண்களுக்குத்தான்!

2011ம் ஆண்டின் அமைதிக்கான நோபிள் பரிசு மூன்று பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

1. லைபீரியாவின் அதிபர் எல்லன் ஜான்சன் சிர்லீஃப்
2. லைபீரிய புரட்சிப் பெண் லேமான் போவீ
3. யெமனைச் சேர்ந்த சுதந்திரப் போராளி தவக்குல் கர்மான்

சிர்லீஃப் லேமான் கர்மான்

மூன்று பிள்ளைகளுக்குத் தாயான 32 வயதான கார்மான், பெண் உரிமைக்காக தொடர்ச்சியாக போராடும் ஒரு சங்கிலித் தொடரின் தலைவியாவார். கடந்த ஜனவரியில் தொடங்கிய அதிபர் அலி அப்துல்லாஹ் சாலிஹை விரட்டியடிக்கும் புரட்சியில் ஒரு முக்கிய தலைவியாகத் திகழ்ந்து வரும் இவர், அரபு உலகம் முழுமைக்கும் இந்தப் புரட்சி அலை வீசக் காரணமாகவும் இருந்தவர்.

ஹாவார்ட் பல்கலைக்கழகப் பொருளாதாரப் பட்டதாரியான 72 வயது சிர்லீஃப் (லைபீரிய அதிபர்) 2005ம் ஆண்டு ஆபிரிக்காவின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் அதிபர் என்ற பெருமைக்கு உரியவராவார். 2003ம் ஆண்டு வரைக்கும் பல ஆண்டுகளாக போர்களால் அலைக்கழிக்கப்பட்டு வந்த லைபீரியா, ஐ.நா.வின் அமைதிப் பாதுகாப்புப் படையின் உதவியால்தான் வாழ்ந்து கொண்டிருந்தது. சிர்லீஃப் பதவிக்கு வந்தவுடன் தன் கடமை என்ன என்பதை உணர்ந்து நாட்டில் சீர்திருத்தம் கொண்டு வந்தார்.

அடுத்து, லைபீரியாவைச் சேர்ந்த 39 வயது போவீ. லைபீரிய கிறிஸ்தவ-முஸ்லிம் தலைவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்த காலத்தில் அதில் பெண்களையும் தலையிடச் செய்து இரு தரப்பாரையும் ஒரு சந்திப்பு மேசைக்கு கொண்டுவர போராடியவர். அதன் விளைவாகத்தான் இன்று அங்கே நடைபெறும் தேர்தலில் கூட பெண்களும் பங்கேற்க முடிகிறது.

நன்றி: நம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவு

துருக்கிய பிரதமர் யார்?
ரஜப் தையிப் அர்துகான்

இலங்கையின் தற்போதைய உயர் கல்வி அமைச்சர் யார்?
எஸ்.பீ. திஸாநாயக்க

பதவியிலிருந்து துரத்தப்பட்ட எகிப்திய ஜனாதிபதி யார்?
ஹுஸ்னி முபாரக்

எகிப்தின் தலைநகரம்?
கெய்ரோ

பலஸ்தீன ஜனாதிபதி யார்?
மஹ்மூத் அப்பாஸ்

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர்?
பான்கீ மூன்

லிபியாவின் தலைநகரம்?
திரிப்போலி

எம்.ஜே.எப். தாஹா
க/அல்அஸ்ஹர் கல்லூரி, அக்குரணை

சிறப்பு மலர்ந்தது

வருடத்தில் சிறந்த வருடம் – ஹிஜ்ரி வருடம்

மாதத்தில் சிறந்த மாதம் – ரமழான் மாதம்

வாரத்தில் சிறந்த வாரம்– ஹஜ்ஜின் முதல் வாரம்

நாட்களில் சிறந்த நாள்– வெள்ளிக்கிழமை

நேரத்தில் சிறந்த நேரம்– தஹஜ்ஜுதுடைய நேரம்

நிமிடத்தில் சிறந்த நிமிடம்– அல்லாஹ்வை நினைவு கூரும் நிமிடம்

அஸ்பா ஸஹ்ரான், தரம்– 09
அல்அஸ்ஹர் ம.க., திஹாரிய

கலைச் சொற்கள்

அணு	- Atom
சடப்பொருள்	- Matter
கதோட்டு	- Cathode
அனோட்டு	- Anode
அயன்	- Iorn
சக்தி மட்டம்	- Energy Level
எரிபொருள் கலம்	- Fuel Cell
உலர் பனிக்கட்டி	- Dry Ice
சமன்பாடு	- Equation
மூலகம்	- Element
நியூத்திரன்	- Neutron
ஓடு	- Orbit
சடத்துவ வாயு	- Inert Gas

எம். தெளபீக் யஸாரா
தரம்– 09, கமு/ அல்மனார் ம.க.
மருதமுனை

சிந்தனை முத்துக்கள்

உடலையும் நாவையும் மனதையும் அடக்குபவர்களே அறிவாளிகள்.

–கௌதம புத்தர்

நமக்கு பிறர் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறோமோ அதையே நாம் பிறருக்கு செய்ய வேண்டும்.

– அண்ணல் காந்தி

ஒரு நூல் நிலையத்தின் கதவு திறக்கப்படும்போது ஒரு சிறைச்சாலையின் கதவு தாழிடப்படுகிறது.

– விவேகானந்தர்

றுக்ஸானா ஸுஹைப், தரம்– 10
அ/ மனாருல் உலூம் மு.ம.வி.,
கம்பிரிகஸ்வெவ

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கட் துளிகள்

ஒருநாள் சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் முதன் முதலில் 1000 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை வீரர் யார்?

ரோய் டயஸ்

6வது உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டித் தொடரின் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டவர்?

சனத் ஜயசூரிய

1982ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கட் அந்தஸ்தைப் பெற்றதும் அணியின் முதலாவது தலைவராக இருந்தவர் யார்?

பந்துல வர்ணபுர

அர்ஜுண ரனதுங்க எப்போது கிரிக்கட்டிலிருந்து ஓய்வு பெற்றார்?

10.08.2000

கிரிக்கட் அந்தஸ்தைப் பெற்ற 10வது நாடு எது?

பங்களாதேஷ்

இலங்கை கிரிக்கட் அணியின் சார்பில் முதலாவது டெஸ்ட் சதம் பெற்றவர் யார்?

சிதத் வெத்தமுனி

ஒருநாள் கிரிக்கட் போட்டிகளில் 1500 ஓட்டங்களைப் பூர்த்தி செய்ய முதல் வீரர் யார்?

சச்சின் டெண்டுல்கர்

எத்தனையாவது உலகக் கிண்ணப் போட்டி கடந்த ஆண்டில் (2011) நடைபெற்றது?

10வது

சச்சின் டெண்டுல்கர் எந்த நாட்டுக்கு எதிராக முதன் முதலாக சர்வதேச கிரிக்கட் போட்டியில் விளையாடினார்?

பாகிஸ்தான்

எம்.என். தாஜ் அப்ஷான் நிஸா
தி/ குறிஞ்சாக்கேணி ம.ம.வி, குறிஞ்சாக்கேணி

உங்களுக்குத் தெரியுமா?

மல்யுத்தம் எந்த நாட்டின் தேசிய விளையாட்டு?
துருக்கி

அடுத்த உலகக்கிண்ண கிரிக்கட்போட்டி நடைபெறவுள்ள நாடு எது?
நியூஸிலாந்து

இருண்ட கண்டம் என அழைக்கப்படுவது?
ஆபிரிக்கக் கண்டம்

பாரசீகம் என அழைக்கப்பட்ட நாடு?
ஈரான்

பாகிஸ்தான் நாட்டை உருவாக்கியவர்?
அலி ஜின்னா

அடுத்த ஒலிம்பிக் போட்டி நடைபெறவிருக்கும் நாடு எது?
லண்டன், இங்கிலாந்து

புவி கோள வடிவமானது என்பதனை நிரூபித்தவர்?
மகலன் (இத்தாலி)

ஆர்.எம். ரக்கீப்
அல்பதா மு.ம.வி., நிலாவெளி

நாடுகளும் பாராளுமன்றங்களும்

இங்கிலாந்து	-	பாராளுமன்றம்
டென்மார்க்	-	போல்கெட்டிங்
ஜேர்மனி	-	பண்டேஸ்டக், பண்டஸ்ராட்
இந்தியா	-	லோக் சபை, ராஜ்ய சபை
இஸ்ரேல்	-	நெசட்
யப்பான்	-	டயட்
நேபாளம்	-	பஞ்சாயத்து, பாராளுமன்றம்
எகிப்து	-	தாருல் அவாம்
அமெரிக்கா	-	காங்கிரஸ்
ரஷ்யா	-	சுப்ரீம் சோவியத்

எம்.எம். நுபைஸ் றிஸ்னி
மன்பஉல் கைராத் அ.க., அக்கரைப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கொண்டாடப்படும் சர்வதேச தினங்கள்

சர்வதேச இளைஞர் தினம்	- ஜனவரி	- 12
சர்வதேச சாரணிய தினம்	- பெப்ரவரி	- 22
சர்வதேச மகளிர் தினம்	- மார்ச்	- 08
சர்வதேச குடிநீர் தினம்	- மார்ச்	- 22
சர்வதேச சுகாதார தினம்	- ஏப்ரல்	- 07
சர்வதேச தாதியர் தினம்	- மே	- 12
சர்வதேச தபால் தினம்	- ஒக்டோபர்	- 09
சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்	- ஜூலை	- 17
சர்வதேச ஆசிரியர் தினம்	- ஒக்டோபர்	- 06
சர்வதேச சமாதான தினம்	- ஒக்டோபர்	- 26

எப். அஸ்கா அஸ்வர், தரம் - 08
க/ தெ. முஸ்லிம். ம.வி, வெலம்பொட

கற்பனைக் கதாபாத்திரங்களும் கதாசிரியர்களும்

மிக்கி மவுஸ்	- வோல்ட் டிஸ்னி
ஸ்பைடர் மேன்	- ஸ்டான் லீ
பெட் மேன்	- பாப் கேன்
நீமோ	- வின்சர் மெக்கே
டொம் அன்ட் ஜெர்ரி	- பிலி ஹன்னா, ஜோஸப் பர்பரா
ஸ்கூபி டூ	- ஃப்ரெட் சில்வர்மேன், ஜோ ரூபி
மௌக்லி (ஜங்கிள் புக்)	- ரூத்ட்யாட் கிப்ளிங்
சூப்பர் மேன்	- ஜோர்ரி சீ கல், ஜோ ஷுஸ்டர்
த எக்ஸ்மேன்	- ஸ்டான் லீ, ஜாக் கிர்பி
போக்கிமான்	- சதோஷி தாஜிரி
வின்னி தபூ	- ஏ.ஏ. மில்னே
பினாக்கியோ	- கார்லோ கொலாடி
அலாவுதீன்	- எட்வர்டோ சாவித்
தி ரோட் ரனர்	- வில் ஈ கோயோட்

நூருல் ஸுமையா, தரம் - 09
ஹிஸ்புல்லாஹ் ம.க., குருநாகல்

நோபிள் பரிசு

முதல் தமிழர் - சேர் சீ.வி. ராமன்

ஆசியாவின் முதல் நபர் - ரவீந்திரநாத் தாகூர் (இலக்கியம்)

குறைந்த வயதில் பெற்றவர் - வில்லியம் லோரன்ஸ் பிரேக் (25 வயது)

முதல் பெண் - மேரி கியூரி அம்மையார் (பௌதிகம்)

வழங்கப்படாத ஆண்டுகள் - 1914, 1918, 1935, 1940, 1941, 1942, 1943

அதிக தடவைகள் பெற்ற நாடு (உலக சமாதான விருது) - அமெரிக்கா

இரண்டு தடவைகள் நோபிள் பரிசு பெற்ற முதல் பெண்மணி - மேரி கியூரி (பிரான்ஸ்)- 1903, 1911

ஆசியக் கண்டத்தில் நோபிள் பரிசு பெற்ற பெண்மணிகள் - அன்னை தெரேஸா, ஆங்சாங் சூகி

ரிஸ்வானா ராஸிக், தரம் - 11
மடிகே மு.ம.வி, இப்பாகமுவ.

குறியீடுகள்

ஒலிவ் இலை- அமைதி

வெண் புறா- சமாதானம்

மஞ்சள் கொடி- தொற்று நோய்

கறுப்புத் துணிப்பட்டி- துக்கம்

கண்கள் கட்டப்பட்டு கையில் தராசு வைத்திருக்கும் பெண்- நீதி

சிவப்பு முக்கோணம்- குடும்பக் கட்டுப்பாடு

செஞ்சிலுவை- மருத்துவ உதவி

அரைக் கம்பத்தில் கொடி- துக்கம்

சிவப்பு விளக்கு, கொடி- அபாயம்

ஜனுல் அம்னா, தரம் - 8
அல்கஸ்ஸாலி ம.க., அடுலுகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகமாக செயற்படுவோம்

மதீனாவுக்கு வந்த நபியவர்கள் அவர்களது சகல செயற்பாடுகளுக்கும் மத்திய நிலையமாக மஸ்ஜிதுந் நபவியை அமைக்கின்ற பணியிலே மிகவும் உற்சாகமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அன்னார் ஸஹாபிகளை உற்சாகப்படுத்தி இறைதிருப்தியை நாடி உவகையோடு மஸ்ஜித் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டார்கள். ஸஹாபிகளோடு சேர்ந்து மஸ்ஜிதைக் கட்டுவதற்காக கற்களையும் மண்ணையும் சுமந்து வந்து தங்களால் முடியுமான பங்களிப்பைச் செய்தார்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள். அதேபோல் ஸஹாபிகளும் தங்களால் முடியுமான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் நல்கினார்கள். மதீனாவில் மஸ்ஜிதை அமைக்கின்ற செயற்பாட்டிலே அனைவரும் உற்சாகமாக புதுத் தெம்புடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் நபியவர்கள் கவிபாடினார்கள்.

இறைவா! மறுமை வாழ்வு தவிர

வேறு வாழ்வில்லை

முஹாஜிர்கள், அன்சாரிகளுக்கு நீ
அபயமளிப்பாயாக இந்த சுமை
கைபரின் சுமையல்ல
நிச்சயமாக இப்பணி
நன்மையானது; தூய்மையானது

இவ்வாறு தங்களை நபியவர்கள் உற்சாகப்படுத்தும்போது ஸஹாபிகள் மிகுந்த உற்சாகமடைந்தார்கள். அந்த உற்சாகத்தை வெளிப்படுத்தும் வகையில் ஸஹாபிகளும் கவி பாடினார்கள்.

நபி பணி செய்ய நாம் அமர்ந்தால்
நம் பணி நற்பணியே

இவ்வாறு ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக் கொண்டும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்கிக் கொண்டும் அந்தப் பணியிலே ஈடுபட்டார்கள். ஒவ்வொருவரும் கல்லை சுமந்து கொண்டும் மண்ணை சுமந்து கொண்டும் ஈத்த மரங்களைக் கொண்டு வந்தும் பங்களித்தார்கள். அவ்விடத்திலிருந்த மரங்களை வெட்டியெடுத்து கிப்லா திசையில் வரிசையாக நட்டினார்கள். கற்களாலும் மண்ணினாலும் சுவர்கள் அமைத்து பேரீத்தங் கீற்றினால் முகடுகள் அமைத்தார்கள்.

நபியவர்கள் மதீனாவுக்கு வந்த பிறகு அவர்களது ஒட்டகம் முதலாவது அமர்ந்த இடத்தையே மஸ்ஜிதைக் கட்டுவதற்குத் தெரிவு செய்திருந்தார்கள். அந்த இடம் இரண்டு அநாதைகளுக்குச் சொந்தமாக இருந்தமையால் அவர்களுக்குரிய பணத்தைக் கொடுத்து அந்த நிலத்தை வாங்கி மஸ்ஜித் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டார்கள். அந்த மஸ்ஜித் நபிகளாரின் நிர்வாக மையமாகவும் கல்வி நிலையமாகவும் பொதுவாக அனைத்து செயற்பாடுகளினதும் மத்திய நிலையமாகவும் செயற்பட்டது.

நாமும் எமது செயற்பாடுகளை உற்சாகமாக அமைத்துக் கொள்ள வேண்டும். புதுத் தெம்புடன் உற்சாகமாகச் செயற்பட வேண்டும். உங்கள் வாழ்நாள் முழுவதும் இந்த உற்சாகம் இழையோடியிருக்க முயற்சி செய்யுங்கள். மற்றவர்களை நீங்கள் உற்சாகப்படுத்தும்போது நீங்கள் உற்சாகமடைவீர்கள். உற்சாகம் உங்கள் வாழ்க்கையின் வெற்றி என்பதையும் உங்களுக்கும் புத்துணர்ச்சியை வழங்கும் என்பதையும் நீங்கள் உணர்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I learn every day

Assalamu alaikum Dear friends,

HAPPY NEW YEAR 2012 (1433)

Let's begin the New Year with great new ideas! Isn't it essential to face the year with an excellent plan? First of all let's update our niyyah- intention, that is, to do all things only for the sake of Allah.



Next, m....what changes can I make in my life?

- I can improve my school activities.
- I can improve my behavior.
- I can improve my skills.

If we look at our behavior,

Are you ready to answer my questions?

Ok, then tell me how do you help your mother?

a) I help her to sweep the floor.

b) I go to the shop when needed.

c) I scrap coconut for her every morning.

d) I look after my baby sister/brother

e) I take care of the plants in the garden

f) I wash the utensils after meals.

I'm sure most of you are doing either one of these work at home. Do you know, by helping your mother you make her happy, and get rewarded from Allah as well...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tips for you.!!

Can you make an omelet? Have you ever tried doing some thing in the kitchen? Just try this friends, it's really great.



Recipe Omelet

Ingredients.

- An egg
- Salt
- Pepper
- Chopped onion
- Chopped chilies
- Oil

Method.

First, break the egg into a bowl. Then beat it well. Add some salt and pepper while you beat. You can add the chopped onions and chilies finally. Next, place a pan on the stove. Let it become hot. Then add the oil. When the oil becomes hot, pour your mixer of beat egg into the oil, so that it spreads out in a circular shape. Wait till your egg gets fried. Make sure you don't burn the onions and chillies. Your omelet is ready now!!

Mm, I love omelet!!!

Now, if we look at our skills, what about our language skills. Being fluent in a language makes things easy for us. For English, we are always here for you. Try to fill in these blanks with the correct form of verb.



Newspapers

Life without newspapers_____(be) difficult to imagine. It is the first thing that we ____(look) for every morning. It ______(bring) us news and views from all corners of the world. Any event or occurrence of importance that takes place_______(report) by the newspapers.

The newspapers _______(carry) information for everyone-businessman, politician, unemployed people, players and kids etc. It _______(widen) knowledge, keeps one abreast of all advances _______(make) in the fields of science, education, medicine and technology.

Newspapers _______ (keep) us in constant touch with news, developments, changes, advances and occurrences in each nook and corner of the world and at a very little price to the reader. Its popularity _______ (give) it immense power in molding public opinion.

(Courtesy –world wide web)

Answers

Is, look, brings, is reported, carry, widens, made, keep, gives.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your corner

Entries through mail

Trust God

If God brings you to it,
He will bring you through it.
In Happy moments, praise God.
In Difficult moments, seek God.
In Quiet moments, worship God.
In Painful moments, trust God.
In Every moment, thank God.

M.A.M MAFAS
Zahira/national/college/gintota

English language

English is a West Germanic language that arose in the Anglo-Saxon kingdoms of England and spread into what was to become south-east Scotland under the influence of the Anglian medieval kingdom of Northumbria. Following the extensive influence of Great Britain and the United Kingdom from the 18th century, via the British Empire, and of the United States since the mid-20th century, it has been widely dispersed around the world, becoming the leading language of international discourse and the *lingua franca* in many regions.

It is widely learned as a second language and used as an official language of the European Union and many Commonwealth countries, as well as in many world organizations. It is the third most natively spoken language in the world, after Mandarin Chinese and Spanish. It is the most widely spoken language across the world.

Fathima Nasheefa
12 commerce, Hizbullah central college

Entries through Post

Albert Einstein



Albert Einstein was a scientific genius who chaned the way we view our universe. In 1900's he united space and time one mathematical description.Ten years later he propsed a complete theory of gravity that expained how the universe works, relating mass and energy in the famous equation $E= mc^2$.

Many people doubted his theories, but later investigations have been made and some of Einstein's theories have been proved. Einstein's theories have transformed the science of physics. His theory lead to the way of nuclear weapons.

Aysha Fahma Mohameed Rafeeque
09 A, P/Fathima Balika Maha Vidyalaya.

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

10ம் தரம்

i) அ) புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் மனித குலத்தின் கடந்த காலத்தைக் கற்பதுதான் வரலாறு.

ஆ) வரலாறு என்பது ஒரு யுகத்தில் எழுதிப் பாதுகாத்து வைக்குமளவுக்குப் பெறுமதி மிக்க விடயங்களை அதற்கு முன்னைய யுகமொன்றிலிருந்து தேடிக் கண்டு பிடித்துக் கொள்வதாகும்.

இ) வரலாற்றைக் கற்பதற்கு முன்னர் வரலாற்றாசிரியரை இனங்கண்டு கொள்ள வேண்டும்.

வரலாறு பற்றிக் கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் மேலே உள்ளன. இவற்றைக் கூறியவர்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து அதே ஒழுங்கில் தருக.

(ஹெரடோஸ், ஈ. எச். கார், ஸ்டுவட் பி கொட், பேர்க் ஹாட்) (3 புள்ளிகள்)

ii) வரலாற்று மூலாதாரங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)

iii) காபன் 14 என்பதனை விளக்குக. (5 புள்ளிகள்)

iv) வரலாற்றைக் கற்பதனால் ஏற்படும் பயன்கள் இரண்டை விளக்குக. (6 புள்ளிகள்)

விடைகள்

i) அ) ஸ்டுவட் பி கொட்

ஆ) பேர்க் ஹாட் இ) ஈ. எச். கார்

ii) கல்வெட்டுக்கள், நாணயங்கள், தொல்பொருட்கள், இலக்கியங்கள்

iii) ஒரு தொல்பொருள் எந்த யுகத்திற்கு உரியது என்பதனை நாம் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் உதவியுடன் அறிய முடியும். இவ்வாறு கண்டுபிடிக்க உதவும் முறையே காபன் 14 ஆகும்.

iv) சூழலை நேசிக்கும் பண்பு ஏற்படும்

எமது முன்னோர்கள் எவ்வாறு சூழலைப் பாதிக்காத வண்ணம் தமது தேவைகளை நிறைவேற்றினார்கள் என்பதனை வரலாற்றைக் கற்பதன் மூலம் அறிந்து முடியும்.

மகா பராக்கிரமபாகு, மகா சேனன், தாது சேனன் முதலியோர் இயற்கையாக அமைந்த எச்சக் குன்றுகளின் சுவடுகளை இணைத்தே குளக்கட்டுக்களை அமைத்தார்கள். இதனால் இயற்கைக்கு பாதிப்பு ஏற்படவில்லை. மகா பராக்கிரமபாகு மன்னன் 391 கால்வாய்களை அமைத்ததாக சூலவம்சம் கூறுகிறது. தாதுசேனன் நிலத்தின் மென்சரிவைப் பயன்படுத்தி ஜய கங்கை என்ற கால்வாயை அமைத்தான். 54 மைல் நீளமான இக் கால்வாய் கலா வாவியிலிருந்து திஸா வாவிக்கு நீரைக் கொண்டு சென்றது.

இன ஐக்கியம் வளரும்

அனுராதபுரத்தை 44 வருடங்கள் ஆட்சி புரிந்த சோழ மன்னன் எல்லாளன் சகல இனங்களையும் சமமாகக் கருதி ஆட்சி புரிந்தான். அவன் தமிழ் மன்னனாக இருந்தபோதும் அவனது படையில் சிங்களத் தளபதிகள் பணியாற்றினர். சகல இனத்தவரும் அவனது ஆட்சியை விரும்பினர். இலங்கை மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதனை எல்லாளனின் வரலாறு எமக்கு பாடம் புகட்டுகிறது. மேலும் சிங்கள மன்னனாகிய துட்டகைமுனு, தமிழ் மன்னன் எல்லாளனின் சமாதியை அனைவரும் கௌரவப்படுத்த வேண்டும் என்று கட்டளையிட்டது இன ஐக்கியத்திற்கான ஒரு வழிகாட்டியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) i) A. இப்படத்திலுள்ள படத்திலுள்ள மன்னனின் பெயரைத் தருக.

B. அவன் எந்த நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான்?

C. அவனது ஆட்சி முடிவுக்கு வந்த ஆண்டைத் தருக. (3 புள்ளிகள்)

ii) 1797 இல் ஆங்கில வர்த்தகக் கம்பனிக்கு எதிராக கரையோர மக்கள் போராட்டம் நடத்தியமைக்கான 4 காரணிகளைத் தருக. (4 புள்ளிகள்)

iii) 1815 இல் மலையகம் தனது சுதந்திரத்தை இழந்தமைக்கான காரணிகள் இரண்டை விளக்குக.

iv) 1848ம் ஆண்டு கிளர்ச்சிக்கான காரணிகள் மூன்றை விளக்குக. (6 புள்ளிகள்)

விடைகள்

1) i) A. ஸ்ரீ விக்ரம ராஜசிங்க B. கண்டி C. 1815

ii) புதிய வரிகளை அறிமுகப்படுத்தியமை. பொருளாக அறவிடப்பட்ட வரிமுறைக்குப் பதிலாக பணமாக பெற முனைந்தமை.

உள்ளூர் வரி வசூலிப்பாளர்களுக்குப் பதிலாக அமில்தார் நியமிக்கப்பட்டமை.

வரியை ஏல விற்பனை மூலம் வசூலிக்க முயன்றமை.

iii) பிரதானிகள் மன்னனை வெறுத்தமை

1803 இல் ஆங்கிலேயர் கண்டியை கைப்பற்ற முடியாதிருந்தமைக்கு பிரதானிகள் மன்னனை ஆதரித்தமை முக்கிய காரணியாகும். ஆனால் 1815 இல் பெரும்பாலான பிரதானிகள் மன்னன் ஸ்ரீ விக்ரம இராஜசிங்கனை எதிர்த்தனர். இன்னும் சில பிரதானிகள் ஆங்கிலேயரை ஆதரித்தனர். இதனாலேயே ஆங்கிலேயர் கண்டியை இலகுவாகக் கைப்பற்றினர். பிரதானி எகலப் பொல மன்னனுக்கு எதிராக கலகத்தை மேற்கொண்டார். அதனால் மன்னன், எகலப் பொலவின் மனைவியையும் பிள்ளைகளையும் போகம்பர வாவியில் மூழ்கடித்து கொலை செய்தான். மகாஅதிகாரமாக பதவி வகித்த பிலிமத்தலாவைக்கும் மன்னனுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. பிலிமத்தலாவைக்கு எகலப்பொல, புஸெல்ல திசாவை, எக்னெலி கொட முதலிய பல பிரதானிகளும் ஆதரவளித்தனர். இவ்வாறு பிரதானிகள் மன்னனை வெறுத்தமையினால் ஆங்கிலேயர் கண்டியை 1815 இல் இலகுவாகக் கைப்பற்றினர்.

ஆளுநர் பிரௌண்றிக்கின் திட்டமிட்ட படையெடுப்பு

1803இல் ஆங்கிலேயரின் படையெடுப்பு வெற்றி பெறுவதற்கு படையெடுப்பு திட்டமிடப் படாதே காரணமாகும். ஆனால் ஆளுநர் பிரௌண்றிக் நன்கு திட்டமிட்டே படையெடுத்தார். மலைநாட்டின் இயற்கைத் தோற்றம், கால நிலை, படை பலம் என்பனவற்றை அறிந்து அதற்கேற்பவே படையெடுப்பை மேற்கொண்டார். அவர் 1815 ஜனவரியில் கண்டிக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தார். 3000 பேரைக் கொண்ட எட்டுப் படையணிகள் கண்டியை வெற்றிகரமாக அடைந்தன. இறுதியில் மெத மஹ நுவர என்ற இடத்தில் பதுங்கியிருந்த மன்னனையும் அரசியையும் 1815.02.18 இல் ஆங்கிலேயர் இலகுவாகப் பிடித்தனர். மன்னனைக் கைது செய்ய எகலப்பொல, எக்னெலிகொட ஆகிய பிரதானிகள் உதவினர். இவ்வாறு ஆளுநர் பிரௌண்றிக் திட்டமிட்டு படையெடுத்தமையினாலேயே அவர்களால் மலையகத்தைக் கைப்பற்ற முடிந்தது.

iv) கம்சபா முறை நீக்கப்பட்டமை

புராதன காலத்திலிருந்து இலங்கையில் கம்சபா முறை நிலவி வந்துள்ளது. கிராம மக்களிடையே ஏற்படும் பிணக்குகளை கம்சபா என்ற கிராம சபை தீர்த்து வைத்தது. கோல்புறூக்கோடு வந்த கமறன் என்பவர் இலங்கையில் நீண்ட காலமாக நிலவி வந்த கம்சபா முறையை நீக்கினார். பிரித்தானியாவில் உள்ளது போல நீதிமன்றங்களை நகரங்களில் நிறுவினார். இது பொது மக்களுக்கு பல பாதிப்புக்களை ஏற்படுத்தியது. நீதிமன்றங்களுக்காக மக்கள் நகரங்களுக்கு அலைய வேண்டி

(30ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் இலட்சியப் பயணத்தின் இடையூறுகள்

வஹாப் ஏ ஹனீபா (இஸ்லாஹி)

மாணவர்களின் இலட்சியப் பயணத்தில் இணையதளங்கள் எவ்வாறு இடையூறாக அமைகின்றன என்பதை சென்ற இதழில் பார்த்தோம். இணையதளம் மட்டுமல்லாது நட்பு, காதல், போதை என்பனவும் இலட்சியப் பயணத்தில் இடையூறாய் அமைகின்றன.

01. மோசமான நண்பர்கள்

பள்ளிப் பருவத்தில் துள்ளி விளையாடும் மாணவர்களின் கற்றலுக்கு பாடசாலை நட்பு பக்கபலமாக அமையும் அதே சந்தர்ப்பத்தில், சிலவேளைகளில் படுபாதகமாகவும் அமைந்து விடுகிறது. பிந்திய குழந்தைப் பருவத்தினர் (6-12 வயது) பெற்றோரின் நெருக்கத்தைவிட தமது நண்பர்களின் நெருக்கத்தை அதிகம் நேசிக்கின்றனர் என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒரு பிள்ளையின் விருத்தியில் அப்பிள்ளையின் சமவயதினரே அதிகம் தாக்கம் செலுத்துகின்றனர். பிள்ளைகள் பெற்றோருடன் இருக்கும் நெருக்கத்தை விட சக நண்பர்களுடன் அதிகமாகப் பழகுவதாலும் சேர்ந்து விளையாடுவதாலும் இந் நெருக்கம் அதிகரிக்கிறது. பெற்றோரின் கண்டிப்பு, அரவணைப்பைவிட சம வயது நண்பர்களோடு கொண்டுள்ள நட்பைப் பாதுகாப்பது வாழ்வில் உயர்ந்த பண்பு என அவர்கள் நினைக்கின்றனர்.

இவ்வாறான நண்பர்கள் பொருத்தமானவர்களாகவும் நல்லவர்களாகவும் அமைகின்றபோது அவர்களின் நடத்தைகளும் ஏனைய விருத்திகளும் நன்றாக அமையும்; இலக்கு நோக்கிய பயணம் தடங்கல்கள் இன்றி தெளிவாக அமையும். அந் நட்பானது பிழையாகவும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்ற குழுக்களோடும் கிட்டுகின்றபோது பிள்ளையின் எதிர்காலம் இருண்டு கேள்விக்குறியாகி விடும்.

"நல்ல நண்பன் கஸ்தூரி வியாபாரியைப் போன்றவன். கெட்ட நண்பன் துருத்தியில் ஊதும் கொல்லனைப் போன்றவன்'' என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். கஸ்தூரி வியாபாரியிடம் சதாவும் கஸ்தூரி மணம் கமழ்ந்து கொண்டிருப்பதுடன் அவரை நெருங்குகின்றவர்களிடமும் கஸ்தூரி வாடை தொற்றிக் கொள்ளும். கொல்லன் தனது பட்டறையில் வேலை செய்யும்போது அங்கு எழும்பும் நெருப்புப் பொறிகள் அவனுடைய ஆடைகளையும் அவனை நெருங்குபவர்களின் ஆடைகளையும் தீயினால் சுடுகிறது.

மோசமான நண்பர்கள், தமது சகபாடியை வாழ்க்கையின் மிக மோசமான பக்கங்களுக்கு அழைத்துச் செல்வதால் இத்தகைய நண்பர்கள், இலக்கு நேக்கிய பயணத்தின் தடைக் கற்களாக அமைந்து விடுவர். மலிந்து கிடக்கும் மோசமான விடயங்களைப் பெறுமானப்படுத்தி அவ்விடயங்களுக்கு அடிமையாக்கி விடுவார்கள். காதல், களியாட்டம், வீண் விளையாட்டு போன்ற விடயங்களை அறிமுகம் செய்து உண்மையான இலக்கை விட்டும் பராக்காக்கித் தூரப்படுத்தி விடுவர். மது, மாது, சூது, களவு, கொலை, கொள்ளை மற்றும் பாதாள உலகத்துடனான தொடர்பு போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை, புன்னகை, சந்திப்பு, வார்த்தைகள், உரையாடல்கள்... என்று தொடரும் இப்பிரச்சினை, இறுதியில் நீ இன்றி நான் இல்லை என்ற முட்டாள்தனமான உளவியல் நிலைக்கு மாணவர்களைத் தள்ளி விடுகிறது. இதன் விளைவாக கல்வியின் மீதான ஆர்வம், ஆசை, வேட்கை, ஈடுபாடு, கற்றலின் பால் மனதை ஒருமுகப்படுத்தல் என்பன குறைந்து இலட்சியம் தொலைத்த இளைஞர்களாக மாறுகின்றனர்.

படுபாதகமான செயற்பாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்தும் வல்லமை இவ்வகையான நட்புக்கு உண்டு.

2. காதல் விவகாரம்

மாணவர்களின் இலட்சியப் பயணத்தில் இடையூறாக அமையும் மற்றுமோர் அம்சமாக இதைக் குறிப்பிடலாம். தற்கால சமூகத் தளத்தில் காதல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூகத் தோற்றப்பாடு என இளைஞர்களும் யுவதிகளும் தவறாக எண்ணுகின்றனர். இவ்வுணர்வு பல்வேறு காரணங்களால் பாடசாலை மாணவ மாணவிய ரையும் விட்டுவைக்கவில்லை என்பது கவலைக் குரிய விடயமாகும்.

காதல் உணர்வை ஊக்குவிக்கும் காரணிகளாக கூட்டுக் குடும்ப அமைப்பு, கலவன் பாடசாலை கள், ஆண்-பெண் கலப்பு வகுப்பறைகள், அதி வேக நகரமயமாக்கல் போன்ற சமூக நிலைமை களைக் குறிப்பிடலாம்.

நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் குறிப் பாக, இலத்திரனியல் ஊடகங்களின் வளர்ச்சி எதிர்ப்பால் கவர்ச்சியைத் திட்டமிட்டுத் தூண் டும் வகையில் இயங்குகின்றது. இதனால் இளை ஞர் யுவதிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் காதல் என்ற மாய வலையில் சிக்கி பொன்னான எதிர்காலத்தையும் உயர் இலட்சியங்களையும் மண்ணாக்குகின்றனர்.

பார்வை, புன்னகை, சந்திப்பு, வார்த்தைகள், உரை யாடல்கள் என்று தொடரும் இப்பிரச்சினை இறு தியில் நீ இன்றி நான் இல்லை என்ற முட்டாள்தன மான உளவியல் நிலைக்கு மாணவர்களைத் தள்ளி விடுகிறது. இதன் விளைவாக கல்வியின் மீதான ஆர்வம், ஆசை, வேட்கை, ஈடுபாடு, கற்றலின் பால் மனதை ஒருமுகப்படுத்தல் என்பன குறைந்து இலட்சியம் தொலைத்த இளைஞர்களாக மாறு கின்றனர். காதல் தோல்வியில் முடியும்போது தற் கொலை செய்து கொள்ளும் நிகழ்வுகள் இன்று சர்வசாதாரணமாக இடம்பெறுகின்றன. தவிர காதல் தோல்வியானது பாரிய மனச்சிதைவு, மன அழுத்தம், உள நெருக்கீடு, ஞாபக இழப்பு போன்ற இன்னோரன்ன உளவியல் கோளாறுகளுக்கும் இட்டுச் செல்கிறது.

பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் காதல் விவகாரத்தின் தாக்கம் எவ்வளவு தூரம் காணப் படுகிறது என்பதை அறியும் நோக்கில் கொழும்பு மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளிலும் கல்வி பயிலும் 45 முஸ்லிம் மாணவர்களை வைத்து மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் தரம் 6 முதல் உயர்தரம் வரையிலான எல்லா வகுப்பறைகளிலும் இப்பி ரச்சினை காணப்படுகின்றமை அறியப்பட்டுள்ளது. தரம் 11ல் படிக்கும் மாணவர்களுள் 40% ஆனோர் காதல் வலையில் சிக்கியுள்ளனர். காதல் விவகா ரத்தால் ஏற்படும் மோசமான விளைவுகளுள் 60% ஆனவை கல்வியின் மீது மாணவர்களின் ஆர்வம் குன்றுவதோடு தொடர்பானவையாகும். காதலை ஊக்குவிக்கும் காரணிகளுள் தொடர்பு சாதனங்களின் பங்கு 40% என்பதை அந்த ஆய்வு மேலும் தெளிவுபடுத்துகிறது.

03. போதைப் பொருள்

மாணவர்களின் மத்தியில் வளர்ந்து வருகின்ற, அவர்களின் எதிர்கால இலட்சியத்திற்குத் தடை யாக அமைகின்ற மற்றுமோர் அம்சம்தான் போதைப் பொருள் பாவனை.

உலக சுகாதார அமையம் போதைவஸ்துப் பாவனையை பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்துகிறது: "உயிருள்ள அங்கி ஒன்றினால் உள் ளெடுக்கப்படும்போது அதன் நடத்தையை அல்லது பல நடத்தைகளைப் பாதிக்கக் கூடிய ஏதாவது வஸ்து."

போதைப் பொருளுக்கு அடிமையாதல் என்பது, குறிப்பிட்ட போதைவஸ்தின்றி அந்நபரால் வாழ முடியாத நிலையாகும். உடலியல், நடத்தையி யல் மற்றும் அறிவுசார் தோற்றப்பாட்டை பாதிக் கும் அளவுக்கு அந்நபர் அக்குறிப்பிட்ட வஸ்துவில் தங்கியிருக்கும் நிலையையும் இது குறிக்கிறது.

மாணவர்கள் மத்தியில் ஊடுருவியுள்ள போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்காக அரசாங் கம் பல முயற்சிகளை எடுத்த போதிலும், குறுகிய

(22ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டுத் திட்டம் புதுப் பொலிவு பெற

தினமும் திட்டமிடுங்கள்

ஒவ்வொரு நாளாந்தத் திட்டமிடலும் வெற்றி பெற்றால் வாராந்தத் திட்டம் வெற்றி பெறுவது சுலபமாகிவிடும். வாராந்தத் திட்டம் வெற்றி பெற்றால் மாதாந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவுறும். மாதாந்தத் திட்டங்கள் வெற்றியடைந்தால் வருட இலக்குகளை இலகுவாக எட்டலாம். எனவே, காலம் இருக்கிறது என்ற எண்ணத்தை விட்டுவிட்டு நாளாந்தத் திட்டமிடலை ஒழுங்காக அமைத்து தினமும் முடியுமான வரை நாளாந்தத் திட்டமிடலை வெற்றிகரமாக அமைத்துக் கொள்ள முயற்சியுங்கள்.

ஜே.எம். அஸீம் (நளீமி)

புதிய ஆண்டில் புது நடைபோட உள்ள நீங்கள் புதிதாய்த் தொடங்குங்கள். புதிது புதிதாய் சிந்தியுங்கள். உலகம் உங்களிடமிருந்து புதிது புதிதாகத்தான் எதிர்பார்க்கிறது. புதிய திட்டம் போடுங்கள், உங்களின் திறமைகளுக்குப் புதுப் பொலிவு கொடுங்கள். உங்கள் வாழ்க்கையை வசந்தமாக்குங்கள். வெற்றியை நோக்கி நடைபோடுங்கள். விரக்தியிலிருந்து விடுபடுங்கள். நீங்கள் ஓய்வாகக் கழித்த உங்கள் விடுமுறை உங்களுக்கு புது உற்சாகத்தைத் தந்திருக்கும்.

வாழ்க்கையில் முன்னேறியவர்கள் இப்படித்தான் புதிது புதிதாய் சிந்தித்தார்கள். திட்டம் தீட்டினார்கள்; தோல்வி மேல் தோல்வி. சளைக்காமல் போராடினார்கள். வெற்றி அவர்களை வாழ்த்தி வரவேற்றது. புதிய ஆண்டில் உங்கள் சிந்தனைகள் புதிது புதிதாய் மலரட்டும்.

செயற்திட்டம்

வெற்றிபெறுவதற்கு எம்மிடம் உரிய செயற்திட்டம் இருக்க வேண்டும். அது நாளாந்த செயற்திட்டமாக இருப்பது அவசியம். தினமும் ஒரு நாளில் செய்து முடிக்க இயலுமான வேலைகளைக் குறித்து அதனை உடனுக்குடன் செய்ய வேண்டும். நாளை செய்ய வேண்டிய வேலையை இன்று இரவு தூங்கச் செல்லும் முன் குறித்துக் கொள்ளுங்கள். மறுநாள் காலையில் ஏலவே குறித்த அவ்வேலைகளைக் கொண்ட To-Do List தயாரித்து முன்னுரிமை, கால அவகாசம் என்பவற்றின் அடிப்படையில் பட்டியலிட்டு ஒவ்வொரு வேலையையும் செய்ய பொருத்தமான பொழுதுகளையும் அடையாளம் கண்டு அவற்றை செயற்படுத்துங்கள்.

முடியுமானவரை நீங்கள் குறித்துக் கொண்ட வேலைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துவிட்டே அன்றைய தினம் தூங்கச் செல்லுங்கள். சிலபோது சில வேலைகளைச் செய்ய முடியாமற் போனால் அதற்குரிய காரணத்தை சிந்தித்துப் பாருங்கள். அது உங்கள் பலவீனமாக இருந்தால் அதனை மறுநாளிலிருந்து நிவர்த்தி செய்வதற்கு முயற்சியுங்கள்.

ஒவ்வொரு நாளாந்தத் திட்டமிடலும் வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றால் வாராந்தத் திட்டம் வெற்றி பெறுவது சுலபமாகிவிடும். வாராந்தத் திட்டம் வெற்றி பெற்றால் மாதாந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவுறும். மாதாந்தத் திட்டங்கள் வெற்றிய டைந்தால் வருட இலக்குகளை இலகுவாக எட்டலாம்.

எனவே, காலம் இருக்கிறது என்ற எண்ணத்தை விட்டுவிட்டு நாளாந்தத் திட்டமிடலை ஒழுங்காக அமைத்து தினமும் முடியுமான வரை நாளாந்தத் திட்டமிடலை வெற்றிகரமாக அமைத்துக் கொள்ள முயற்சியுங்கள். இன்றைய தினத்தை உங்கள் வாழ்நாளில் இறுதித் தினமாக நினைத்து வாழ்ந்தால் உங்கள் செயற்பாடுகள் வினைத்திறன் பெறும்; உத்வேகமடையும். இது உங்கள் வாழ்வை நாளாந்த செயற்பாடுகளை உங்கள் இலக்குகளை ஒழுங்குபடுத்துவதோடு இலகுவாக விரைவாகவும் அடையச் செய்யும்.

1. உங்கள் சிந்தனைகளை ஒன்றுசேருங்கள்; மனதை ஒருமுகப்படுத்துங்கள்

நாளை நீங்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை அதற்கு முதல் நாளே தீர்மானித்துக் கொள்ளுங்கள். நிகழ்வுகளை முன்கூட்டியே சிந்திப்பது அவற்றை வினைத்திறனாக எதிர்கொள்ள உதவும். இவற்றைப் பதிந்து கொள்வதற்கான உபாயத்தைக் கையாளுங்கள். ஒரு குறிப்புக் கொப்பியில் அவற்றைக் குறித்துக் கொள்ளலாம். உங்கள் கணினியில் பதிந்து கொள்ளலாம். ஏன் உங்கள் கையடக்கத் தொலைபேசியில்கூட குறித்துக் கொள்ளலாம். உங்களுக்கு இலகுவானதும் வசதியானதுமான ஒரு முறையைக் கையாளுங்கள். இது உங்கள் மறதிக்கு பிரதியீடாக அமையும்.

2. நாளாந்த வேலையை ஒழுங்குபடுத்துங்கள்

நாளை செய்ய வேண்டிய வேலைகளை இன்றே ஒழுங்குபடுத்துங்கள். ஒழுங்குபடுத்துவது என்பது குறிப்பிட்ட வேலையை என்ன ஒழுங்கில் செய்ய வேண்டும் என்பதை திட்டமிட்டு குறித்த ஓர் ஒழுங்கிற்குள் கொண்டு வருவதாகும். குறித்த வேலையை செய்யும்போது கையாளும் உபாயங்களை அடையாளப்படுத்துவதாகும். உடனே செய்ய வேண்டியது எது, பிறகு செய்ய வேண்டியது எது என்ற அடிப்படையில் வேலைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள்.

3. To-Do List

நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளைப் பட்டியலிடுங்கள். உங்களுடைய To-Do Listஐ செயற்படுத்துவதற்கான சரியான முறையைக் கண்டுபிடியுங்கள். வெறுமனே நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளைப் பட்டியலிடுவதால் மட்டும் பயனில்லை.

4. முன்னுரிமைப்படுத்துங்கள் (Prioritize tasks)

வேலைகளை வெறுமனே குறித்துக் கொள்வது மாத்திரம் வேலை சிறப்பாக நடைபெற உதவாது. ஒவ்வொரு வேலையினதும் முக்கியத்துவம், அவசியம், அவசரம் கருதி முற்படுத்தி பிற்படுத்தி செய்ய வேண்டியிருக்கும். அவ்வாறு முன்னுரிமைப்படுத்துவது முக்கியமான வேலைகள் தவறவிடப்படுவதைத் தடுக்கும். உரிய வேலைக்கு உரிய முக்கியத்துவமளித்து செயற்பட உதவும்.

5. யதார்த்தமாய் திட்டமிடுங்கள் (Be realistic)

யதார்த்தத்தில் வாழுங்கள். திட்டமிடும்போது யதார்த்தத்தைப் புரிந்து திட்டமிடுங்கள். யதார்த்தத்தில் இந்த வேலை சாத்தியமா, குறித்த பொழுது பொருத்தமானதா என்பவற்றையறிந்து வேலைகளைத் திட்டமிடுங்கள். வெற்றி குறித்து கவனமாயிருக்கும் நீங்கள் யதார்த்தத்தில் எந்த வேலை சாத்தியம் என்பதைப் புரிந்து திட்டமிடுங்கள்.

6. வேலைகளைப் பகுதியாக்கிக் கொள்ளுங்கள் (Be Specific)

எந்த வேலையையும் முழுத் தொகுதியாக வைத்துக் கொண்டு செயற்பட வேண்டாம். அவற்றைப் பகுதியாக்கிக் கொள்ளுங்கள். பகுதி பகுதியாகப் பிரித்துப் பணியாற்றும்போது வேலைகளின் பளு குறைவடைந்து அவை சிறியதாகவும் இலகுவானதாகவும் மாறுவதோடு எளிதாக ஒவ்வொரு வேலையையும் உங்களால் செய்து முடிக்க இயலுமானதாயிருக்கும்.

7. நெகிழ்வுடன் நடந்து கொள்ளுங்கள் (Be flexible)

உங்கள் திட்டமிடலை எப்போதும் நெகிழ்வுத் தன்மையுடன் அமைத்துக் கொள்ளுங்கள். அதில் தேவைக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் திட்டமிட்ட நிகழ்வுகளை முற்படுத்தி பிற்படுத்தி செய்யக் கூடியதாகவும் அமைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், நீங்கள் திட்டமிடும்போது இருந்ததை விட நிலைமைகள் செயற்பாட்டின்போது மாறியிருக்கும். எனவே, திட்டமிட்டபடிதான் செயற்படுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நினைத்தால் திட்டம் தோல்வியில் முடியும்.

8. எதிர்பாராத செயற்பாடுகளை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்

நீங்கள் நினைத்த மாதிரியே எல்லாம் சுமுகமாய் நடைபெறும் என எதிர்பார்க்காதீர்கள். தடைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். சவால்களை சந்திக்க வேண்டி வரும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் எதையும் எதிர்கொள்வதற்கான தைரியத்தோடு வாழ்வீர்கள். உங்கள் திட்டம் நிறைவேறா விட்டால் அதற்கான மாற்றுத் திட்டங்களை வைத்துக் கொள்ளுங்கள்.

9. தினமும் பதியுங்கள்; திறமையாய்ச் செயற்படுத்துங்கள்

தினமும் நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளைக் குறித்துக் கொள்ளுங்கள். உங்கள் வேலைகளை பிறர் பாராட்டும் வகையில் திறமையாகச் செய்யுங்கள். புது உற்சாகத்துடன் ஒவ்வொரு நாளையும் ஆரம்பியுங்கள்.

10. Schedule And Timetable

உங்கள் வேலைகளை நேரசூசி அடிப்படையில் செய்வதற்குப் பழகியிருப்பீர்கள். இப்போது அதனுடன் சேர்த்து உங்கள் நாளாந்த செயற்பாடுகளுக்கான Scheduleஐயும் திட்டமிடுங்கள். நேரத்திற்கு செயற்படுவது மிகவும் பிரதானமானது. குறித்த நேரத்தில் குறித்த வேலையை முடித்துக் கொள்வதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்களால் குறித்த தினத்தில் செய்ய முடியுமானளவு வேலைகளை மாத்திரம் குறித்துக் கொள்ளுங்கள். உங்களால் மறுநாள் செய்ய முடியாதளவு வேலைகளை செய்வதற்கு திட்டமிடாதீர்கள். அதிகம் திட்டமிட்டால்தான் அரைவாசியாவது செய்ய முடியும் என்ற சிந்தனை கொண்டவர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நீங்கள் திட்டமிட்டதை 100 வீதம் சிறப்பாகச் செய்வதற்கு முயற்சியுங்கள். இதற்காக ஆரம்பத்தில் குறைந்தளவு வேலைகளைப் பட்டியலிட்டு ஒவ்வொன்றையும் வெற்றிகரமாகச் செய்வதற்குப் பழகுங்கள். வெற்றியின் மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள். உங்களை நீங்கள் உற்சாப்படுத்தி ஊக்குவித்துக் கொள்ளுங்கள். ■

மாணவர்களின்... 19ம் பக்கத் தொடர்

நோக்கம் கொண்ட பணத்திற்காக எதையும் செய்யக்கூடிய மோசமான பண்பைக் கொண்ட சில வியாபாரிகள் புதுப்புது போதைப் பொருட்களை மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி வருகின்றனர். பொதுவாக போதைவஸ்துப் பாவனைக்குப் பின்வரும் காரணிகள் பங்களிக்கின்றன.

1. உயிரியல் காரணிகள்
   - ⇨ பரம்பரை அலகு மாற்றம்
   - ⇨ பின்வாங்குவதால் ஏற்படும் விளைவைத் தடுத்தல்
   - ⇨ உயிரியல் இரசாயனக் காரணிகள்

2. உளவியல் காரணிகள்
   - ⇨ அதீத உணர்ச்சிகளை வெளிப்படுத்தல்
   - ⇨ தாழ்வு மனப்பான்மை
   - ⇨ தன்னை முகாமைத்துவம் செய்யும் ஆற்றல் இல்லாமை
   - ⇨ குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட பாதிப்பு
   - ⇨ இலக்குகளை அடைவதில் தோல்வி
   - ⇨ உளவியல் அழுத்தம்

நோய் நிவாரணி என்ற வகையிலும் புதியன தேடுதல் என்ற வகையிலும் போதைவஸ்தைப் பாவித்தல்

3. சமூகக் காரணிகள்
   - ⇨ சமவயதினரின் அழுத்தம்
   - ⇨ பிறரின் நடத்தையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றல்
   - ⇨ போதைவஸ்து இலகுவான வழியில் கிடைத்தல்
   - ⇨ குடும்பத்திடையே ஏற்படும் மோதல்கள்
   - ⇨ குடும்ப, சமூக ஆதரவு கிடைக்காமை
   - ⇨ துரித நகரமயமாக்கல்

போதைப் பொருள் மனித மூளையின் ஞாபக சக்திக்குப் பொறுப்பாகவுள்ள ஹிப்போகம்பஸ் என்ற பகுதியைத் தாக்குவதால் மாணவர்களின் ஞாபகசக்தி குறைவதுடன் அவர்களின் ஆளுமையிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நடத்தை ஒழுங்கீனம், பண்பாட்டுச் சரிவு, சமூக விரோதச் செயல்கள் என்பவற்றின்பால் மாணவர்களை இட்டுச்செல்லும் துணிவு போதைப் பொருட்களுண்டு.

எனவே, மாணவர்களாகிய நீங்கள் உங்கள் இலட்சியப் பயணத்திற்கு இடையூறாக அமையும் இத்தகைய விடயங்களிலிருந்து அவதானத்துடன் நடந்து உங்களைப் பாதுகாத்து இலட்சியப் பயணத்தை இனிதாய் அமைத்திட வாழ்த்துக்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்: 28

அன்றாட வாழ்வில் அரபு மொழி

اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

ظَرْفُ الزَّمَانِ

செயல் நடந்த காலத்தைக் காட்டுவதற்கு இச்சொல் பயன்படுத்தப்படும்.

هَلْ قَرَأْتَ اَلْكِتَابَ صَبَاحًا؟

நீ காலையில் புத்தகம் வாசித்தாயா?

اَلصَّبَاحُ என்பது காலை என்ற கருத்தைக் குறிக்க வரும். இது வசனத்தில் வரும்போது (صَبَاحًا) நிலையில் வரும்.

ذَهَبْتُ إلى الْمَلْعَبِ مَسَاءً

நான் மாலையில் விளையாட்டு மைதானத்திற்குச் சென்றேன்.

أُصَلِّى اَلعِشَاءَ قَبْلَ الْعَشَاءِ

இரவுச் சாப்பாட்டுக்கு முன்னர் இஷாவைத் தொழுவேன்.

أُقَابِلُ اَلْمُدَرِّسَ بَعْدَ اَلحِصَّةِ

பாடவேளையின் பின்னர் ஆசிரியரைச் சந்திப்பேன்.

أَذْهَبُ اِلَى الْعَاصِمَةِ غَداً

நான் நாளைக்கு தலைநகருக்குச் செல்வேன்.

بَقِيتُ فِي بَيْتِ أَخِي يَوْمًا

எனது சகோதரனின் வீட்டில் ஒரு நாள் தங்கினேன்.

قَابَلْتُ اَلْيَوْمَ طَالِبًا جَدِيْدًا

இன்று ஒரு புதிய மாணவனைச் சந்தித்தேன்.

أَصْبَحْتُ الآنَ طَبِيْبًا

இப்போது நான் வைத்தியனாகி விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

صَبَاحًا / فِى الصَّبَاحِ	نَدْرُسُ هُنَا سَنَةً இங்கு நாம் ஒரு வருடமாகக் கற்கிறோம்.
مَسَاءً / فِى الْمَسَاءِ	أَدْرُسُ اَللُّغَةَ الْعَرَبِيَّةَ شَهْراً ஒரு மாத காலமாக அறபு மொழியைக் கற்கிறோம்.
ظُهْراً / فِى الظُّهْرِ	ذَهَبْتُ اِلَى الْجَامِعَةِ بِالْاَمْسِ நேற்று நான் பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன்.
عَصْراً / فِى الْعَصْرِ	أَنْتَظِرُ اَلْحَافِلَةَ سَاعَةً ஒரு மணித்தியாலமாக பஸ்வண்டிக்காகக் காத்திருக்கிறேன்.
لَيْلاً / فِى اللَّيْلِ	تَنَاوَلْتُ اَلْغَدَاءَ ظُهْراً நான் பகலுணவை ழுஹர் வேளையில் உண்டேன்.
شَهْراً / فِى الشَّهْرِ	قَرَأْتُ اَلصُّحُفَ عَصْراً நான் அஸர் வேளையில் பத்திரிகைகளை வாசித்தேன்.
سَاعَةً / فِى السَّاعَةِ	أُرَاجِعُ دُرُوْسِيْ لَيْلاً நான் இரவில் எனது பாடங்களை மீட்கிறேன்.
سَنَةً / فِى السَّنَةِ	

هذَا كِتَابِيْ இது எனது புத்தகம்.	هذَا لَيْسَتْ كِتَابِيْ இது எனது புத்தகமல்ல.
هَذَا صَدِيْقِيْ இவர் எனது நண்பர்.	هذَا لَيْسَ صَدِيْقِيْ இவர் எனது நண்பரல்ல.
هذِهِ غُرْفَتِيْ இது எனது அறை.	هذِهِ لَيْسَ غُرْفَتِيْ இது எனது அறையல்ல.
هذَا قَلَمِيْ இது எனது பேனை.	هَذَا لَيْسَ قَلَمِيْ இது எனது பேனையல்ல.
هذِهِ حَدِيْقَتِيْ இது எனது பை.	هذِهِ لَيْسَتْ حَدِيْقَتِيْ இது எனது பை அல்ல.
هؤُلَاءِ اَصْدِقَائِيْ இவர்கள் எனது நண்பர்கள்.	هؤُلَاءِ لَيْسُوْا اَصْدِقَائِيْ இவர்கள் எனது நண்பர்கள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 நிகழ்வுகள்... பதிவுகள்...

ஜனவரி

04 அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்திலுள்ள பிரிஸ்பேர்ன் நகரில் பெய்த கடும் மழை காரணமாக 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்ட தோடு 20 ஆயிரம் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

13 பிரேஸில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகருக்கு அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு ஆகியவற்றில் 270 பேர் உயிரிழந்தனர்.

19 பாகிஸ்தான் தென்மேற்குப் பகுதியில் 7.4 ரிச்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

24 தென்னாபிரிக்காவில் வெள்ளத்தில் சிக்கி 100க்கும் அதிகமானோர் பலியாகினர். லா நினோ பருவநிலை மாறுபாட்டால் தென் ஆபிரிக்கா உள்ளிட்ட ஆபிரிக்க கண்டத்தின் தென் பகுதியில் உள்ள ஆறு நாடுகளில் கடும் மழை பெய்து வெள்ளம் அதிகரித்தது. தென் ஆபிரிக்காவில் வெள்ள அபாயத்தால் 8000 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

25 உலகிலேயே உயரமான கட்டிடமான டுபாயின் புருஜ் கலிபாவின் 122வது மாடியில் உணவகம் திறக்கப்பட்டது. 442 மீ. உயரத்தில் இருக்கும். இந்த உயரமான உணவகத்தின் பெயர் எட்மொஸ்பியர்.

27 எகிப்தில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் ஆரம்பித்தன. அந்நாட்டில் 30 ஆண்டுகளாக ஆட்சி யில் இருந்த ஹுஸ்னி முபாரக் தலைமையிலான அரசில் ஊழலும் வேலைவாய்ப்பின்மையும் பெருகி விட்டதாகக் கூறி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

31 மியன்மார் நாடாளுமன்றம் 20 ஆண்டுகளுக்குப் பிறகு திறக்கப்பட்டது.

பெப்ரவரி

01 உலகின் வயது கூடிய பெண்மணியான இயுனைஸ் சென்போர்ன் தனது 115வது வயதில் டெக்ஸாஸில் காலமானார்.

01 மலேசியாவில் பெய்த கடும் மழை காரணமாக 40 ஆயிரம் பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெ யர்ந்தனர். இதனால் மலாக்கா, நெக்ரி செம்பிலன், கிழக்கு பகாங், சபாஹ் மாநிலங்கள் பாதிக்கப்பட்டன.

10 எகிப்து நாட்டின் ஜனாதிபதி ஹுஸ்னி முபாரக் பதவி விலகினார்.

14 பஹ்ரைன் தலைநகரான மனாமாவில் உள்ள பேர்ள் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக் கள் திரண்டு ஜனாதிபதி ஷேய்க் கலீபா பின் சல்மான் அல்கலீஃபா பதவி விலக வேண்டும் என போராட் டம் மேற்கொண்டனர்.

24 மத்திய கிழக்கில் இடம்பெற்றுவரும் மக்கள் போராட்டங்களினால் சவூதி மன்னர் அப்துல்லாஹ் அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கவுள்ளதாக அறி வித்தார்.

28 லிபியாவில் வன்முறைகள் அதிகரித்துள்ள நிலை யில் ஜனாதிபதி முஅம்மர் கடாபி தலைமையிலான லிபிய அரசு மீது ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் தடை விதித்தது. 15 உறுப்பு நாடுகள் அடங்கிய இந்த அமைப்பு இந்த தடைக்கு ஏகமனதாக ஒப்புதல் அளித்தது.

மார்ச்

10 76 வயதாகும் தலாய்லாமா திபெத் அரசியலிலி ருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

10 போர்ப் சஞ்சிகையின் 2011ம் ஆண்டின் பணக் காரர்களுக்கான பட்டியலில் மெக்சிகோவின் கார் லோஸ் சிலிம் முதலிடத்தினை பெற்றார். இவரின் சொத்து மதிப்பு 74 பில்லியன் அமெரிக்க டொலர்கள்.

அமெரிக்காவின் பில் கேட்ஸ் 56 பில்லியன் டொலர் சொத்துக்களுடன் 2ம் இடத்திலும் மூன்றாவது இடத்தினை 50 பில்லியன் டொலர்கள் சொத்துக்க ளுடன் வொர்ன் புபட்டும் பிடித்துள்ளார்.

10 உலகின் சக்தி வாய்ந்த மனிதர்கள் பட்டியலை அமெரிக்காவின் போர்ப்ஸ் இதழ் வெளியிட்டது. இதில் கடந்த ஆண்டு முதல் இடத்தில் இருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை பின்தள்ளி சீன ஜனாதிபதி ஹூ ஜின்டா முதலாமிடத்தைப் பிடித்துள்ளார். மூன்றாம் இடத்தில் சவூதி மன்னர் அப்துல்லாஹ் வும் ஒன்பதாம் இடத்தில் சோனியா காந்தியும் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY
JAFFNA



10 ஜப்பானின் கிழக்குக் கரையோர ஹொன்சு தீவில் 6.4 என்ற ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

14 பிரேசிலின் தென் கரையோரப் பகுதிகளில் அடை மழை பெய்ததால் அங்கு நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் 8000க்கும் அதிகமான மக்கள் வீடுகளை இழந்தனர்.

16 பஹ்ரைனில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையே இடம்பெற்ற உக்கிர மோதலில் குறைந்தது இருவர் பலியானதுடன் 200 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அந்நாட்டு மன்னர் ஹமாத் பின் இஸா அல்கலிபா 3 மாத கால அவசரகால சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்.

26 புவி வெப்பமடைதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உலகம் முழுவதும் பெரும்பாலான பகுதிகளில் இரவு ஒரு மணி நேரம் மின் விளக்குகள் அணைக்கப்பட்டன.

ஏப்ரல்

02 உலகக் கிண்ணக் கிரிக்கட் தொடரின் இறுதிப் போட்டி இலங்கை இந்திய அணிகளுக்கிடையில் மும்பையில் இடம்பெற்றது. அதில் இந்தியா வெற்றி பெற்றது.

19 நைஜீரியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குட்லக் ஜொனதன் மீண்டும் வெற்றிபெற்றார்.

23 சி.டி.யை அறிமுகம் செய்தவரான நோரியோ ஒஹா மரணமடைந்தார்.

30 ரோமானிய பேரரசு காலத்திற்குரிய 2000 வருடங்கள் பழைமையான கப்பலொன்று ரோமின் புராதன ஒஸ்டியா துறைமுகத்திற்கருகில் கண்டுபிடிக்கப்பட்டது.

மே

மே 01 உஸாமா பின் லாதின் அமெரிக்கத் துருப்பினரால் படுகொலை செய்யப்பட்டார்.

11 விக்கிலீக்ஸ் இணையதளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அஸாஞ்சுக்கு அவுஸ்திரேலிய சிட்னி சமாதான மன்றத்தின் உயர் கௌரவ விருது வழங்கப்பட்டது. மனித உரிமைகளை ஊக்குவிக்க தைரியத்துடன் பாடுபட்டமைக்காகவே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

12 ஸ்பெய்னின் தென்கிழக்கு நகரான லோரகாவில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதில் 50 பேர் காயமடைந்து 15,000 பேர் தமது வீடுகளை இழந்தனர்.

16 காஸாவுக்கு உதவிப் பொருள்கள் எடுத்துச் சென்ற கப்பல் இஸ்ரேல் கடற்படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டைத் தொடர்ந்து தனது திட்டத்தைக் கைவிட்டுத் திரும்பியது.

19 சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் டோமினிக் ஸ்ட்ரோஸ் கான் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

23 அமெரிக்க மிஸோரி மாநிலத்திலுள்ள ஜொப்லின் நகரைத் தாக்கிய சூறாவளியில் 89 பேர் பலியாகினர்.

31 ஜேர்மனியில் உள்ள அனைத்து அணுமின் நிலையங்களும் 2022ம் ஆண்டிற்குள் படிப்படியாக மூடப்படுமென அந்நாட்டு அரசாங்கம் அறிவித்தது. அங்கு தற்போது 17 அணுமின் நிலையங்கள் உள்ளன. அந்நாட்டுக்குத் தேவையான மொத்த மின்சாரத்தில் 23 சதவீதம் இவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.

ஜூன்

12 சீனாவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட நான்கு மாகாணங்களில் திடீரெனப் பெய்த பெருமழையில் சிக்கி, 50 பேர் பலியாகியதுடன் ஒரு இலட்சத்து 27 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெறியேற்றப்பட்டனர்.

18 ஐ.நா. பாதுகாப்புப் பேரவையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பான்கீ மூன் ஏகமனதாக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

27 வியட்நாமின் வட பகுதியில் வெள்ளம் மற்றும் மின்னல் தாக்கம் காரணமாக 17 பேர் பலியாகினர்; 64 பேர் காயமடைந்துள்ளதுடன், 6 பேர் காணமால் போயுள்ளனர். இவ் வெள்ளத்தால் 2600 வீடுகள் அழிவடைந்துள்ளதுடன் 57,000 ஏக்கர் நெற் செய்கை அழிவுக்குள்ளாகியது.

29 சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பதவிக்கு பிரான்ஸ் நாட்டின் நிதியமைச்சரான கிறிஸ்டைன் லகாட்டே(55) தெரிவானார். இதன் தலைமைப் பதவிக்குத் தெரிவான முதற் பெண் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

30 சீனாவில் கடலுக்கு மேலாக கட்டப்பட்ட உலகின் அதி நீளமான பாலம் பொதுமக்கள் பாவனைக்கென திறந்து வைக்கப்பட்டது. குயிங்டாஹோ ஹய்வான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பெயரிடப்பட்டுள்ள 42.4 கிலோ மீற்றர் நீள மான இப்பாலம் சீனாவின் கிழக்குக் கரையோர நகரான குயிங்டாஹோவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இப் பாலமானது இதுவரை காலமும் உலகின் நீளமான பாலம் என்ற பெருமையைப் பெற்றிருந்த அமெரிக்க லூசியான மாநிலத்தில் அமைந்துள்ள பாலத்தினை விட 3 மைல்கள் நீளம் கூடியதாகும். 4 வருடங்களில் சுமார் 960 மில்லியன் பவுண்கள் செலவில் இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டது. இப்பாலமானது 5,200 இற்கும் அதிகமான தூண்களை கொண்டுள்ளது. தினசரி 30 ஆயிரம் கார்கள் இப்பாலத்தில் பயணிக்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜூலை

3 தாய்லாந்தில் இடம்பெற்ற தேர்தலில் அதன் எதிர்க் கட்சி வெற்றியீட்டியது. நாடு கடத்தப்பட்ட முன்னாள் பிரதமர் தக்ஷின் ஷினவட்ராவின் சகோதரி யிங்லக் ஷினவட்ரா (44) கடும் போட்டிக்கு மத்தியில், நாட்டின் முதலாவது பெண் பிரதமராக பதவியேற்றார்.

5 சூடானிலிருந்து 200 குடியேற்றவாசிகளுடன் சவூதி அரேபியாவை நோக்கி பயணித்த படகு செங்கடல் பகுதியில் மூழ்கியது. அதில் பயணித்தவர்களில் 197 பேர் உயிரிழந்தனர்.

8 பிரிட்டனில் டே ஸ்மித் என்ற 4 வயது சிறுமி 2 கிலோ மீட்டர் தூரத்தை நீந்தி புதிய சாதனை படைத்தார்.

9 சூடானிலிருந்து பிரிந்த தென் சூடான் தனி நாடானது. இதன்படி உலக நாடுகளின் எண்ணிக்கையில் 196 ஆவது நாடாகவும் ஆபிரிக்காவின் 54 ஆவது நாடாகவும் தென் சூடான் பதியப்பட்டது. தெற்கு சூடானின் தலைநகராக ஜூபா பிரகடனப்படுத்தப்பட்டது. நாட்டின் முதல் அதிபராக சல்வா கெய்ரர் தேர்வு செய்யப்பட்டார்.

21 லெபனான் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட 800 ஆண்டு பழமையான ஒலிவ் மரம், அபுதாபி யில் நடப்பட்டது.

25 சூழலியல் நிபுணர்கள் குழு கட்டார் நாட்டில் நீரில் வெவ்வேறு உருவங்களையும் வயதினையும் கொண்ட ஒரு திமிங்கில சுறாக் கூட்டத்தைக் கண்டு பிடித்தனர்.

ஆகஸ்ட்

04 4 வயது பிள்ளைக்கு தந்தையான மார்க் டக்கன் என்ற 29 வயது இளைஞர் லண்டன் மெட்றோ பொலிட்டன் பொலிஸினரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து கலவரம் இடம்பெற்றது.

06 வட லண்டனிலுள்ள றொட்டென்ஹாம் பிரதேசத்தில் கலவரம் ஏற்பட்டது. இதன்போது ஆர்ப்பாட்டக் காரர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது பெற்றோல் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதுடன், கட்டடங்களுக்கும் வாகனங்களுக்கும் தீ வைத்தனர்.

08 இஸ்ரேலில் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் ஈடுபட்டனர். டெல் அவிவ் நகரில் குறைந்தது 200,000 பேரும் ஜெருஸலேமில் 30,000 பேரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலமானது இஸ்ரேலில் கடந்த ஒரு தசாப்த காலப்பகுதியில் இடம்பெற்ற மிகப்பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமாக கருதப்படுகிறது.

13 சீனாவின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளுடன் உருவாக்கப்பட்ட தொடர்பாடல் செயற்கை கோளை பாகிஸ்தான் விண்ணிற்கு அனுப்பியது. பாக் சாட்-1 ஆர் என்ற இந்த செயற்கைகோள் பாகிஸ்தான் நாட்டின் விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களால் உருவாக்கப்பட்டது.

18 ரஷ்யா முதல் முறையாக தனது ஸ்டெல்த் போர் விமானத்தினை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தியது. சுகோயி டி-50 எனப் பெயரிடப்பட்டுள்ள இப்போர் விமானம் இந்திய-ரஷ்ய கூட்டுத் தயாரிப்பாகும்.

செப்டெம்பர்

2 கடாபிக்கு பின்னரான லிபியாவின் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்காக 60 நாடுகளின் பிரதிநிதிகள் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் கூடினர். பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸி மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மாநாட்டில் லிபியாவின் இடைக்கால தலைவர்களும் கலந்து கொண்டனர்.

3 சிரியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு, மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியம் தடை விதித்துள்ளது. இதன் மூலம், சிரிய ஜனாதிபதி பஷர் அல்அஸதுக்கு மேலும் நெருக்கடி அதிகரித்தது. சிரியா தலைநகர் டமாஸ்கஸ், துருக்கி எல்லை அருகில் உள்ள நகரங்கள் என நாடு முழுவதும் அஸதுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

5 ஜப்பானைத் தாக்கிய தலஸ் சூறாவளியால் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்டது. இதனால் 5 இலட்சத்திற்கும் அதிகமானோர் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர்.

8 ரஷ்யாவின் யரோசிலாவல் நகரத்தின் அருகிலுள்ள விமான நிலையமொன்றிலிருந்து புறப்பட்ட யாக் 42 என்ற விமானம் விபத்துக்குள்ளானதில் 43 பேர் பலியாகினர்.

11 அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்டு 10வது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

10 தன்சானியாவில் படகு விபத்தில் 240 பேர் உயிரிழந்தனர்.

17 டென்மார்க் பொதுத் தேர்தலில் அந் நாட்டு இடது சாரி கட்சி வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற ஹெல்லி தோர்னிங் ஸ்கமிட் டென்மார்க்கின் முதல் பெண் பிரதமராகப் பதவியேற்றார்.

17 அமெரிக்காவில் ஏற்பட்ட கடன் நெருக்கடிக்கு எதிராக மக்கள் வோல் ஸ்ட்ரீடில் உள்ள ஜுகோட்டி பூங்காவில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

21 இந்தோனேஷியாவில் 36 பேருடன் பயணித்துக் கொண்டிருந்த படகொன்று விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த 11 பேர் உயிரிழந்தனர்.

20 ஆப்கானின் முன்னாள் ஜனாதிபதி புர்ஹானுத்தீன் ரப்பானி தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இவர் 1990களில் அந்நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

22 சீனாவில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் 175 பேர் வரை பலியாகினர். சிங்கியாங் மாகாணத்தில் 8,400 வீடுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர்.

18 சிக்கிம் மற்றும் நேபாள எல்லைப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 116 பேர் பலியாகினர்.

24 சாம்பிய ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைவர் மைக்கேல் சதா (74 வயது) வெற்றி பெற்றுள்ளார்.

26 சஊதி அரேபியாவில் இடம்பெறும் நகராட்சித் தேர்தல்களில் பெண்கள் போட்டியிடுவதற்கும் வாக்களிப்பதற்கும் அனுமதி வழங்கப்படும் என அந்நாட்டு மன்னர் அப்துல்லாஹ் அறிவித்தார்.

27 இரண்டாம் உலகப் போரின்போது சுமார் 240 தொன் வெள்ளியுடன் ஜேர்மனியப் படைகளின் தாக்குதலுக்குள்ளாகி அட்லாண்டிக் கடலில் மூழ்கிய பிரித்தானியக் கப்பலொன்றின் சிதைவுகளை கண்டு பிடித்துள்ளதாக அமெரிக்க ஆழ்கடல் ஆராய்ச்சி நிறுவனமான ஒடிசி அறிவித்துள்ளது.

ஒக்டோபர்

4 சோமாலியத் தலைநகர் மொகடிசுவிற்கு அருகில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 70க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

6 அப்பிள் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஸ்டீவ் ஜொப்ஸ் மரணமடைந்தார்.

13 இந்தோனேசிய பாலி தீவுக்கு அப்பால் 6.0 ரிச்டர் பூமியதிர்ச்சியால் கட்டடங்கள் பல சேதமடைந்ததால் பெருந்தொகையான மக்கள் காயங்களுக்குள்ளாகினர்.

13 அவுஸ்திரேலிய பாராளுமன்ற கீழ்சபை காபன் வரிக்கான சட்ட மூலமொன்றை குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றியது. இந்த சட்டமூலமானது அவுஸ்திரேலியாவில் அதிகளவு காபனை வெளியிட்டு சுழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சுமார் 500 கம்பனிகள், தாம் வெளியிடும் ஒவ்வொரு தொன் காபனீரொட்சைட் வாயுவுக்கும் 53 டொலரை வரியாக செலுத்துவதை வலியுறுத்துகிறது. இந்தச் சட்ட மூலமானது, 2020 ஆம் ஆண்டுக்குள் காபனீரொட்சைட் மாசு வெளியீட்டை 159 மில்லியன் தொன்கள் குறைப்பதை நோக்காகக் கொண்டது.

16 ஹமாஸ் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்ட இஸ்ரேல் இராணுவ வீரர் ஜிலாட் ஷாலிட் விடுதலை செய்யப்பட்டார். இவருக்கு பதிலாக 400 இற்கும் மேற்பட்ட பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்தது.

18 மத்திய அமெரிக்காவில் வெள்ளம் மற்றும் மண் சரிவுகளில் சிக்கி 80 பேர் உயிரிழந்தனர். இந்த வெள்ளத்தால் 100, 000 பேர் பாதிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபி சிர்த் நகரில் வைத்து கொல்லப்பட்டார்.

22 சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் சுல்தான் பின் அப்துல் அஸீஸ் அல்சுஊத் தனது 81 ஆவது வயதில் நிவ்யோர்க்கில் உயிரிழந்தார்.

23 துருக்கி நாட்டில் ஏற்பட்ட பூகம்பத்தில் 1000 பேர் பலியானார்கள். 1000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

24 துருக்கியின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தில் ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளில் சிக்கி 1,000 பேர் வரை இறந்தனர்.

28 பிளாஸ்டிக்கால் உருவாக்கப்பட்ட உலகின் முதலாவது விமானம் தனது கன்னிப் பயணத்தை ஜப்பானின் டோக்கியோ நகரிலுள்ள நரிடா விமான நிலையத்திலிருந்து ஆரம்பித்தது.

31 அமெரிக்காவின் வடகிழக்கு கடற்கரைப் பகுதி யைத் தாக்கிய பாரிய பனிப் புயல் காரணமாக 6 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். மேலும் இதனால் மின்சார விநியோகம் தடைப்பட்டதால் 3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

31 உலக சனத்தொகை 7 பில்லியன் என்ற எண்ணிக்கையை அடைந்தது. உலகின் 7 பில்லியனாவது குழந்தை பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த தம்பதியினருக்குப் பிறந்த குழந்தையாக இருக்கலாம் எனக் கருதப்பட்டது.

நவம்பர்

1 பலஸ்தீன் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் யுனெஸ்கோவில் தனது அங்கத்துவத்தை பெற்றுக் கொண்டது.

2 லிபிய இடைக்கால அரசாங்கத்தின் புதிய தலைவராக அப்துல் ரஹீம் அல்கீப் தெரிவு செய்யப்பட்டார். இலத்திரனியல் பொறியியலாளரான இவர் லிபிய தேசிய அதிகார மாற்று சபையை சேர்ந்த 51 உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டார்.

12 ஐக்கிய நாடுகள் சபையில் செயல்படும் சர்வதேச நீதிமன்றத்துக்கு 4 நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸ்லோவாகியாவின் பீட்டர் டோம்கா, சீனாவின் ஸயீ ஹான்கின் ஆகியோர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். இத்தாலியின் ஜியோரஜியோ காஜா இந்த குழுவில் இடம்பெற்றுள்ள புதிய உறுப்பினராவார்.

14 அமெரிக்காவில் லோவா மாகாணத்தின் எரிடேல் நகரில் நடைபெற்ற உள்ளூர்த் தேர்தலில் போட்டியிட்ட 18 வயது மாணவனான ஜேர்மி மைனர் வெற்றி பெற்று நகர பிதாவாகவும் தேர்வு செய்யப்பட்டார்.

15 ரஷ்யாவின் சொயுஸ் விண்கலமானது மூன்று விண்வெளி வீரர்களுடன் கஸகஸ்தானிலுள்ள பெய்கோனூர் விண்வெளி ஏவு தளத்திலிருந்து ஏவப்பட்டது.

22 எகிப்தில் இடம்பெற்ற தொடர் போராட்டத்தினையடுத்து அங்கு அமைச்சரவை கலைக்கப்பட்டது. எகிப்தில் அதிபராக இருந்த ஹுஸ்னி முபாரக் மக்கள் எதிர்ப்பு காரணமாக பதவி விலகினார்.

25 எகிப்திய இராணுவ ஆட்சியாளர்கள் அந்நாட்டில் புதிய அரசாங்கமொன்றை ஸ்தாபிக்கும் முகமாக முன்னாள் பிரதமர் கமால் கன்ஸூரியை புதிய பிரதமராக நியமனம் செய்தனர். இவர் ஹுஸ்னி முபாரக்கின் அரசாங்கத்தில் பிரதமராக பதவி வகித்தவர் ஆவார்.

26 பாகிஸ்தானில் சோதனைச் சாவடியொன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேட்டோ படையினர் நடத்திய தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

28 எகிப்தில் தேர்தல்கள் ஆரம்பமாகின. இத் தேர்தல் 2012 ஆம் மார்ச் மாதம் வரை நீடிக்கவுள்ளது. 508 உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் சபைக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் வரை நடைபெறவுள்ளன.

28 மொரோக்கோ பாராளுமன்றத் தேர்தலில் இஸ்லாமிய நீதி மற்றும் அபிவிருத்தி கட்சி வெற்றி பெற்றுள்ளது. இத் தேர்தலில் 395 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் பி.ஜெ.டி கட்சி 80 ஆசனங்களை வென்றெடுத்துள்ளது.

டிஸம்பர்

12 வடகொரியா தலைவர் ஹிம் ஜொங் (வயது 69) மாரடைப்பினால் மரணமடைந்தார். 1941 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி பிறந்த இவர் தனது தந்தையான கிம்இல் சுங் இறந்த பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1994 ஆம் ஆண்டு வடகொரியாவின் தலைவராகப் பதவியேற்றார்.

14 பாரிஸ் நகரிலுள்ள யுனெஸ்கோவின் தலைமை யகக் கட்டிடத்தில் முதன்முறையாக பலஸ்தீனக் கொடி ஏற்றப்பட்டது.

17 பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட சூறாவளி, வெள்ளம் காரணமாக ககயான் டி ஒரோ மற்றும் இலிகான் நகரங்கள் முற்றாக அழிவடைந்தன. இந்த அனர்த்தத்தில் 1,080 பேர் கொல்லப்பட்டதாகவும் 338,000 பேர் பாதிக்கப்பட்டதாகவும், 10,000 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு அரசு அறிவித்தது.

19 கிளப் அணிகளுக்கான உலக கிண்ண உதைப் பந்தாட்ட போட்டி ஜப்பானில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் பார்சிலோனா (ஸ்பெய்ன்), சான்டோஸ் (பிரேசில்) அணிகள் மோதின. பார்சிலோனா அணி 4:0 என்ற கோல் கணக்கில் சான்டோஸ் கிளப் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப் பற்றியது.

22 ஈராக் தலைநகர் பக்தாத்தில் தொடர்ச்சியான 12 குண்டு வெடிப்புச் சம்பவங்களில் இடம்பெற்றன. அதில் 57 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

24 கடந்த 2004ஆம் ஆண்டு ஆசிய பிராந்தியத்தை தாக்கிய சுனாமியின்போது உயிரிழந்ததாக நம்பப் பட்ட இந்தோனேஷியாவைச் சேர்ந்த சிறுமியொருவர் 7 வருடங்களின் பின்னர் தனது பெற்றோருடன் மீள இணைந்து கொண்டார்.

27 சீனா மணித்தியாலத்திற்கு 500 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடிய அதிவேக ரயிலை உருவாக்கியுள்ளது.

(17ம் பக்கம் பார்க்கத் தொடர்)

ஏற்பட்டது. அவர்களது காலமும் பணமும் விரயமாகியது. இதனால் மக்கள் ஆங்கிலேயருக்கு எதிராக 1848இல் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டம் வீரபுரன் அப்பு தலைமையில் இடம்பெற்றது. ஆங்கிலேயரின் மாத்தளை மெக்டோவல் கோட்டையை இவர் தாக்கினார்.

தரிசு நிலச் சட்டம்

ஆங்கிலேயர் அதிக இலாபத்தைப் பெறுவதற்காக பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை இலங்கையில் அறிமுகப்படுத்தினர். பெருந் தோட்ட பயிர்ச்செய்கை வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை கோல்புறூக் யாப்பு வழங்கியது.

ஆங்கிலேயருக்கு பெருந்தோட்டங்களை அமைப்பதற்கு அதிகமான நிலங்கள் தேவைப்பட்டன. நிலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் 1940இல் தரிசு நிலச் சட்டத்தை (பாழ் நிலச் சட்டம்) கொண்டு வந்தனர். இச்சட்டத்தைப் பயன்படுத்தி சிங்கள மக்களுக்குச் சொந்தமாக இருந்த காணிகள் ஆங்கிலேயரால் அபகரிக்கப்பட்டன. இதனால் அவர்களின் விவசாயமும் கால்நடை வளர்ப்பும் பாதிக்கப்பட்டன. தரிசு நிலச் சட்டத்தினால் தமது நிலத்தை இழந்த விவசாயிகளே 1848ஆம் ஆண்டு போராட்டத்தை முன்னின்று நடத்தினர். இதனால்தான் இப்போராட்டம் 'விவசாயிகளின் போராட்டம்' என அழைக்கப்படுகிறது. இப்போராட்டம் மாத்தளை, தம்புள்ள,வாரியப்பொல, குருநாகல முதலிய இடங்களில் நடைபெற்றது.

ஆளுநர் டொரிங்டனின் புதிய வரிகள்

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக ஆங்கிலேயர் பல புதிய வரிகளை நடைமுறைப் படுத்தினர். தோணி வரி, வண்டி வரி, நாய் வரி என்பன அவர்கள் அறிமுகப்படுத்திய வரிகளாகும். அவர்கள் முத்திரைக்கான வரியை அதிகரித்தனர். ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 3 சிலிங் வரி செலுத்த வேண்டியிருந்தது. இவ்வாறு ஆளுநர் கடுமையான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். குடாபொல பிக்கு ஆங்கிலேயரின் துப்பாக்கிச் சூட்டில் மரணமானார். வீரபுரன் அப்புவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. கொங்காலேகொட பண்டாவுக்கு நூறு கசையடிகள் வழங்கப்பட்டு மலாக்காவுக்கு நாடு கடத்தப்பட்டார். ஆளுநர் டொரிங்டனின் நடவடிக்கை பிரித்தானிய அரசாங்கத்தையும் அதிருப்திக்கும் உள்ளாக்கியது. எனவே ஆளுநர் விதித்த புதிய வரிகளை நீக்கிய பிரித்தானிய அரசாங்கம் அவரை நாட்டுக்கு திருப்பி அழைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

திருமதி என்.எஸ். நஸ்ரா நிஸாம்தீன்
B.A.(Hons) PGDE

மொழிவளம்

மாணவர்களே!

இரண்டு சொற்களிணைந்து உருவாகும் மொழிக்குள் வித்தியாசம் காண முடியாமல் நீங்கள் தவறான விடைகளைத் தெரிவு செய்வதை நாங்களறிவோம். அவைதான்; இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர், அடுக்கிடுக்குத் தொடர், இணை மொழி. அவற்றை இனங்கண்டு கற்றுத் தெளிவு பெறுங்கள்.

இரட்டைக் கிளவி

- இரண்டு சொற்களின் கூட்டு
- தனிச் சொல்லாகப் பிரிக்க முடியாதது.
- பிரிப்பின் பொருள் தராது.
- ஓசைச் சிறப்பு கொண்டது.
- குறிப்புப் பொருளையும் தரும்.
- மொழிப்பாவனைக்கு அழகு தன்மையூட்டும்.

எடுத்துக்காட்டுகள்

- சுள் சுள் - பட பட - கண கண - குசு குசு - வள வள
- கட கட - முணு முணு - குடு குடு - குபு குபு - முறு முறு
- சட சட - சல சல - விண் விண் - வழு வழு - திரு திரு
- கத கத - குளு குளு - கம கம - சுரு சுரு - மொழு மொழு

சில இரட்டைக்கிளவியும் அவை தரும் பொருளும்

- புறு புறு - புறுபுறுப்பு, முணுமுணுத்தல்
- கிசு கிசு - கிசுகிசுத்தல், சிறு சத்தம்
- குடு குடு - குடுகுடுத்தல், ஓடித்திரிதல்
- கம கம - கமகமத்தல், மிக மணத்தல்
- சிடு சிடு - சிடுசிடுப்பு, கோபக்குறி
- நெரு நெரு - நெருநெருத்தல், உறுத்துதல்
- பள பள - பளபளப்பு, மினுக்கம்
- தழு தழு - நாவு தழுத்தல், தடுமாறிய பேச்சு
- வள வள - வளவளத்தல், பயனற்ற பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்குத் தொடர்

- ➤ இரு சொற்கள் அடுத்து அடுத்து வரும்
- ➤ அதே சொல் அடுத்து வருதல்
- ➤ பொருட் செறிவுக்காக சொல் அடுத்தடுத்து வருதல்

எடுத்துக்காட்டுகள்

➤ ஓடி ஓடி	- குனிந்து குனிந்து	- ஓட ஓட
➤ கட்டுக் கட்டாய்	- வண்டி வண்டியாய்	- மணி மணி
➤ குடித்துக் குடித்து	- விடிய விடிய	- நெருப்பு நெருப்பு
➤ சுடச் சுட	- முத்து முத்தாய்	- தேம்பித் தேம்பி
➤ அணு அணு	- வருக வருக	- பழகப் பழக

இரட்டைக்கிளவி அடுக்கிருக்குத் தொடர்

- ➤ இரு சொற்களின் கூட்டு
- ➤ முன்னைய சொல் அல்லது பின்னைய சொல்
- ➤ ஒன்று மற்றைய சொல்லை அழுத்திச் சொல்வதாக அமைதல்

எடுத்துக்காட்டுகள்

➤ கன்னங்கரிய	- பென்னம் பெரிய
➤ செக்கச் சிவந்த	- பச்சைப் பசேல்
➤ சின்னஞ் சிறிய	- நடு நடுங்கி
➤ தன்னந் தனிய	- வெட்ட வெளி

இணை மொழிகள்

- ➤ இரு சொற்களின் சேர்க்கை
- ➤ பொருட் செறிவுடைய சொற்கள்
- ➤ ஓசை ஒருங்குமிருத்தல் (ஓசைக்காக அயலில் சொல்)
- ➤ ஒரே அர்த்தங்கள் போலமையும் இரண்டு சொற்கள்
- ➤ எதிர்பொருளில் அருகில் சொல் சேர்ந்த இரண்டு சொற்களின் கூட்டு

எடுத்துக்காட்டுகள்

• குறை குற்றம்	நாடு நகர்	மாசு மறு
• சீருஞ் சிறப்பும்	அற்ப சொற்பம்	உற்றார் உறவினர்
• போற்றிப் புகழ்ந்து	சண்டை சச்சரவு	ஈவிரக்கம்
• கட்டித் தழுவி	இடைக்கிடை	ஒழிவு மறைவு
• மூலை முடுக்கு	தங்கி தரித்து	அங்க அவயவம்
• அக்கம் பக்கம்	குறை குற்றம்	ஈயெறும்பு
• அழிந்தொழிந்து	தவிடு பொடி	வாட்டி வதைத்து
• அண்டை அயல்	தப்பித் தவறி	கள்ளங் கபடம்
• அல்லும் பகலும்	ஈடும் இணையும்	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு சொற்களும் ஒத்த பொருளில் இணைந்து இணைமொழியானதை கவனிக்க

- நோய் நொடி
- கண்ட துண்டம்
- நகை நட்டு
- பயிர் பச்சை
- துணி மணி
- ஓய்வு ஒழிவு
- வேலை வெட்டி
- அமளி துமளி
- கிட்டத்தட்ட
- தடல் புடல்
- ஏடா கூடம்
- கொஞ்ச நஞ்சம்
- தட்டுத் தடுமாறி
- விட்ட விடிய
- நடையுடை
- வம்பு தும்பு
- நீட்டி நிமிர்ந்து

இரண்டு சொற்களில் ஒன்று ஓசைக்காக இணைந்து சொல்லழகுடன் இணை மொழியானதை கவனிக்க.

குறிப்பு:- ஓசைக்காக செயல் அயலில் இணையும்போது அச்சொல் பின் சொல்லின் பொருளையே புலப்படுத்தி நிற்பின் அது 'அடுக்கிடுக்குத் தொடர்' என்பதை நினைவில் கொள்க.

உதாரணம்:- வெட்ட +வெளி = வெட்ட வெளி

சின்ன+சிறிய = சின்னஞ் சிறிய

இவை அடுக்கிடுக்குத் தொடராகும்

ஓசைக்காகப் பயன்படுத்திய அதேபொருள் தரும் சொல்

உயர்வு தாழ்வு	விண்ணும் மண்ணும்	உள்ளும் புறமும்
சுக துக்கம்	ஆக்கமும் கேடும்	இன்ப துன்பம்
அடி முடி	மலையும் மடுவும்	அங்கும் இங்கும்
வானமும் வையகமும்	ஏற்ற இறக்கம்	அறமும் மறமும்
கொடுக்கல் வாங்கல்	குண்டும் குழியும்	விருப்பு வெறுப்பு
கூடக் குறைய	ஆக்கி அழித்து	இலாப நட்டம்
பிறப்பும் இறப்பும்	தண்ணீரும் வெந்நீரும்	பிறப்பும் இறப்பும்

இரண்டு சொற்களில் இரண்டு ஒன்றுக்கொன்று எதிர்ப் பதமாக பொருள் தந்து, இணைந்து இணைமொழியானதை கவனிக்க.

இணை மொழிகள் இயம்பி நிற்கும் அர்த்தங்கள்

உண்டு உடுத்து	= அனுபவித்து	குத்து மதிப்பு	= அண்ணளவாக
அங்கும் இங்கும்	= பல பக்கமும்	தடல் புடல்	= ஆரவாரம்
நாடு நகர்	= முழு தேசமும்	ஓடி ஆடி	= சுறுசுறுப்பு முயற்சி
சுக்கு நூறு	= எங்கும் சிதறி	சாக்குப் போக்கு	= வீண் காரணம்
தில்லு முல்லு	= தந்திர ஏமாற்றம்	ஏடாகூடம்	= தாறுமாறாக
பட்டி தொட்டி	= எல்லா இடங்களிலும்	பழக்க வழக்கம்	= நடத்தை, பண்பாடு

மாணவ மணிகளே! இரண்டு சொற்கள் இணைந்து உருவாகும் இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர், அடுக்கிடுக்குத் தொடர், இணைமொழி ஆகியன விசேட பண்புகளை தன்னகம் கொண்டுள்ளதை இப்பொழுது விளங்கியிருப்பீர்கள். வித்தியாசங்களை சரியாக இனங்கண்டு கற்றுப் பயன்பெறுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எஸ்.எம்.ஏ. ஸலாம், மாவனல்லை

சாதாரணதர பரீட்சை எழுதும் மாணவர் எவராயினும் அவர் சமன்பாடுகள் பற்றிய அமைவுகளை விளங்கிக் கொள்ளாதவரை அவருக்கு பரீட்சையில் பூரண சித்தி அடைதல் கடினமானதாகும். ஏனெனில், சமன்பாடுகள் எளிய சமன்பாடுகள், ஒருங்கமை சமன்பாடுகள், இரு படிச் சமன்பாடுகள் என விரிந்து செல்வதையும் கணித வினாக்களின் பெரும்பாலான பகுதிகளில் அதன் ஆதிக்கம் பரந்து காணப்படுவதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

சமன்பாடுகளை அமைத்தல்

வினாப்பத்திரங்களை அவதானிப்பீர்களாயின் நேரடியாக அன்றி தரவுகளின் மூலம் சமன்பாடுகளை அமைத்து தீர்வு காணுமாறு அமையும் வினாக்கள் இடம்பெறுவதனைக் காணலாம். (2011 டிசம்பர் பகுதி A 3ம் வினா b) இவ்வாறான எளிய சமன்பாட்டு வினா ஒன்றை அவதானிப்போம்.

மாலாவிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கையை விட ரவி இரு மடங்கு மாபிள்களை வைத்திருக்கிறான். இவ்விருவரினதும் மாபிள்களின் கூட்டுத் தொகையை விட ரமீஸ் 10 மாபிள்கள் அதிகமாக வைத்திருக்கிறான். மூவரினதும் மொத்த மாபிள்களின் எண்ணிக்கையின் அரைவாசி 23 எனின், ஒவ்வொருவரிடமும் உள்ள மாபிள்களின் எண்ணிக்கை யாது?

மிகச் சிறிய தொகை வைத்திருப்பவர் மாலா என்பதை வினாவிலிருந்து புரிந்திருப்பீர்கள். ஆகவே மாலாவிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கையை x மாபிள்கள் என்போம்.

ஆகவே, ரவி வைத்திருக்கும் மாபிள்கள் 2 x ஆகும்.

இதேபோல் ரமீஸ் வைத்திருக்கும் மாபிள்கள் $(a+2x+10)$ ஆகும்.

∴ மூவரிடமும் உள்ள மாபிள்களின் எண்ணிக்கை

$$x+2x+(x+2x+10)$$
$$=6x+10$$

இக் கூட்டுத் தொகையின் அரைப் பங்கு

$\frac{6x+10}{2}$ ஆகும்

$$\frac{6x+10}{2}=23$$
$$6x+10=46$$
$$6x=46-10$$
$$6x=36$$
$$x=\frac{36}{6}$$
$$x=6$$

பின்ன வடிவமானவை

எண்களின் பொ.ம.சி. பெறக்கூடியவாறான பின்ன வடிவ வினா ஒன்றை அவதானிப்போம்.

$$\frac{2x-1}{3}-\frac{5x-12}{5}=2$$
$$\frac{5(2x-1)-3(5x-12)}{15}=2$$
$$\frac{10x-5-15x+36}{15}=2$$
$$\frac{-5x+31}{15}=2$$
$$-5x+36=2\times15$$
$$-5x+36=30$$
$$-5x=30-36$$
$$-5x=-6$$
$$5x=6$$
$$x=\frac{6}{5}$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி எண் பெறுமானமில்லாத x ஐ சார்ந்த பெறுமானங்கள் சமன்பாட்டின் இரு பக்கங்களிலும் விரவிக் காணப்படினும் எண் பெறுமானங்களை சமன்பாட்டின் வலது பக்கமாகக் கொண்டு செல்வதன் மூலம் தீர்வைப் பெறலாம். அவ்வாறான ஒரு வினா கீழே தரப்படுகிறது.

$$\frac{3x}{2}-5=\frac{2x}{5}+\frac{1}{2}$$

$$\frac{3x}{2}-\frac{2x}{5}=\frac{1}{2}+5$$

$$\frac{15x-4x}{10}=5\frac{1}{2}$$

$$\frac{11x}{10}=\frac{11}{2}$$

$$11x=\frac{11\times10}{2}$$

$$11x=\frac{11\times5}{2}$$

$$x=\frac{11\times5}{2\times11}$$

$$=\frac{5}{2}$$

$$x=2\frac{1}{2}$$

பூனை இல்லாவிட்டால்

ஆசிரியர்: ஒரு வீட்டில் 3 எலிகள் உள்ளன. ஒரு மாத முடிவில் அவை மூன்று மடங்காகின்றன. ஜப்பார் நல்லா யோசிச்சு பதில் சொல்லு. 3 மாத முடிவில் அந்த வீட்டில் எத்தனை எலிகள் இருக்கும்?

ஜப்பார்: சேர், அது... அந்த வீட்டில இருக்கிற பூனையைப் பொறுத்தது சேர்.

ஆசிரியர்: ?????

விடை= 81 (பூனை இல்லாவிட்டால்)

அகரத்தின் வினா விடைப் போட்டி 12

1. விண்வெளியில் கருந்துளைகள் காணப்படுகின்றன என்ற கருதுகோளை முதன் முதலில் முன்வைத்தவர் யார்?
2. ஒளியை விட வேகமாகப் பயணிக்கின்ற ஒன்றை அண்மையில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர். அதன் பெயர் என்ன?
3. குவாரிஸ்மி விட்டுச் சென்ற கணிதப் பணிகளைத் தொடர்ந்தவர் என புகழப்படுபவர் யார்?
4. அபூ யூசுப் அல்கிந்தி எப்போது மரணித்தார்?
5. நட்பு பற்றிய நபிகளாரின் ஹதீஸ் ஒன்றைக் குறிப்பிடுக.
6. லிபியாவின் தலைநகரம் எது?
7. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மஸ்ஜிதுந் நபவியை அமைக்கத் தெரிவு செய்த இடம் எது?
8. யெமனியப் புரட்சிக்குப் பங்காற்றி கடந்த ஆண்டு நோபிள் பரிசு பெற்றவர் யார்?
9. இவர்கள் எனது நண்பர்கள் என்பதை அறபியில் தருக.
10. தென் சூடான் தனி நாடானது எப்போது?

உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி ஜனவரி 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி
அகரம்
வினா-விடைப் போட்டி
77, தெமடகொட வீதி,
கொழும்பு- 09

கடந்த வினா-விடைப் போட்டியில் பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு:
றிகாஸா ரஹ்மதுல்லாஹ்
மாவனல்லை

பரிசுக்குரியவர்கள்:

ஏ.எச். ஷஹீத் சலீமா, கெகிராவ
எம்.ஜே.எப். ஷப்னா, லீமகஹகொடுவ
எஸ்.ஏ.எப். அமீஸா, அனுராதபுரம்
கே.என்.எப். ஜிபா, மருதமுனை
எம்.எஸ்.எம். அவ்பர், காத்தான்குடி
எம்.ஜே.எம். ஜிஸ்யான், வாழைச்சேனை
பாத்திமா நுஸ்லா, காலி
எச்.எம். ஹிமாஸ், ஹொரவபொத்தானை
எம்.எஸ்.எப். ஸிபா, மருதமுனை
சலீம் சப்னா, பொலன்னறுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம்

10, 11
தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்
(விஷேட பயிற்றப்பட்ட ஆசிரியர்– விஞ்ஞானம்

அங்கிகளின் பாகுபாடும்
(Classification and Nomenclature)

- உயிரங்கிகளை அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் கூட்டங்களாக வகைப் படுத்தும் முறையே பாகுபாடு எனப்படும்.
- விலங்கியலின் தந்தை எனப்படும் கிரேக்க நாட்டைச் சேர்ந்த அரிஸ்டோட்டில் என்பவரே அங்கிகளின் பாகுபாட்டை முதலில் அறிமுகப்படுத்தியவர் ஆவார். இவரின் பாகுபாட்டில் தனியொரு இயல்பை மட்டும் வைத்து அங்கிகள் இரு கூட்டங்களாக பிரிக் கப்பட்டன. இது 'செயற்கை முறைப் பாகு பாடு' எனப்படுகிறது.
- கரோலஸ் லீனியஸ் என்பவரே நவீன பாகு பாட்டையும் பெயரீட்டையும் முன்வைத்தவர் ஆவார்.

அங்கிகளின் பிரதான 3 பெருங் கூட்டங்கள் (பேரிராச்சியங்கள்)

தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகள்.

அங்கிகளை 5 பெரும் இராச்சியங்களாக வகைப்படுத்தியவர் ரொபட் விற்றாகர் என்பவரா வார். அவை பின்வருமாறு:

1. மொனரா:
   - பற்றீரியாக்கள், சயனோ பற்றீரியா (நீலப் பச்சை அங்கி) (உ-ம்) றைசோபியம், சல்ம னெல்லா.
2. புரொட்டிஸ்ரா:
   - அல்காக்கள் (உ-ம்) கிளமிடோ மோனசு, இசுப்பைரோ கைரா
   - புரட்டோசோவா (உ-ம்) அமீபா, பரமேசி யம், யூக்ளினா
3. பங்கய்:
   - பங்கசுக்கள் (உ-ம்) மியூக்கர், மதுவம்
4. பிளான்ரே:
   - தாவரங்கள் (உ-ம்) தென்னை, பலா, பன்னம்
5. அனிமேலியா:
   - விலங்குகள் (உ-ம்) மனிதன், மீன்கள், பூச்சிகள்

தாவர இராச்சியம்

பூக்கும் தாவரம்	வித்து மூடியுளிகள்	ஒரு வித்திலைத் தாவரங்கள்	தென்னை, பனை, மூங்கில்	நார் வேர்த்தொகுதி காணப்படும். இலைகள் சமாந்தர நரம்பமைப்பு உடையவை. முப்பாத்துள்ள பூக்கள் காணப்படும்.
		இரு வித்திலைத் தாவரங்கள்	பலா, கத்தரி	ஆணி வேர்த் தொகுதி காணப்படும். இலைகள் வலையுரு நரம்புடையவை. நாற்பாத்துள்ள, ஐம்பாத்துள்ள பூக்கள் காணப்படும்.
பூக்காத தாவரம்	வித்து மூடியிலிகள்	ஜின்னஸ் பேர்ம்	மடுப்பனை (சைக்கஸ்) பைனஸ்	பெண் தாவரத்தின் மாவித்திலைகளில் திறந்த சூல் வித்துக்கள் உருவாகும். வித்துக்கள் பழங்களால் சூழப்படாதவை.
	வித்து அற்றவை	பிரையோபைற்றா (பாசிகள்)	ஈரலுந்ருந் தாவரம் போகனேற்றம்	பிரிவிலி அமைப்புடையவை. (மெய்வேர், இலை, தண்டு காணப்படாது. கலனிழையங்கள் இல்லை.
		தெரோ பைற்றா (பன்னம்)	நெப்ரோலொபிஸ் சல்வீனியா டிறைனேரியா	மெய்வேர், இலை, தண்டு காணப்படும். கலனிழையங்கள் உண்டு.
		இலைக்கோ பைற்றா.	செலாஜினெல்லா	மெய்வேர், இலை, தண்டு காணப்படும். கலனிழையங்கள் உண்டு. கூம்பு எனும் பகுதி காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு இராச்சியம்

விலங்குகள் முள்ளந்தண்டிலிகள், முள்ளந்தண்டுளிகள் என பிரதானமாக இரு வகைப்படும்.

01. முள்ளந்தண்டிலி கணத்தைச் சேர்ந்த அங்கி களின் சில உருக்கள் பின்வருமாறு:



1. *இவற்றில் ஒரே கணத்தைச் சேர்ந்த இரு அங்கிகள் எவை?*
2. *ஆரைச் சமச்சீரான அங்கி எது? அது அடங்கும் கணம் எது?*
3. உடல் துண்டங்களாகப் பிரிந்தது, இரு பக்கச் சமச்சீரானது, நீர்நிலையில் வன்கூடு கொண்டது என்பதற்கு பொருத்தமான அங்கியை எழுதுக.
4. கைற்றினாலான புறவன்கூடு கொண்ட, மூட்டுக்களுடைய தூக்கங்களைக் கொண்ட அங்கியாகக் கருத முடியாதது எது?
5. B அடங்கும் கணத்தின் சிறப்பியல்புகள் இரண்டை எழுதுக.

02. முள்ளந்தண்டுளிகள் கணம் கோடேற்றாவினுள் உள்ளடங்குகின்றன. இது 5 வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. சூழல் வெப்பநிலைக் குருதியுடைய வகுப்புகள் யாவை?
2. வெப்பநிலை தவிர்ந்த பறவைகள், முலையூட்டிகளுக்கிடையில் காணப்படும் இன்னொரு ஒற்றுமை யாது?
3. உபய வாழிகள் அடங்கும் வகுப்பின் சிறப்பியல்புகள் இரண்டை எழுதுக.
4. வாய்க்குழி, தோல், நுரையீரல் என்பன சுவாச அங்கமாகக் காணப்படக் கூடிய முள்ளந்தண்டுளி வகுப்பு எது?

நுண்ணங்கிகள்

வெறுங் கண்ணுக்குத் தெளிவாகத் தென்படாத மிகச் சிறிய அங்கிகள் நுண்ணங்கிகள் எனப்படும். இவை 5 வகைப்படும்.

பற்றீரியா	பங்கசு	அல்கா	புரற்றசோவா	வைரசு
தனிக் கலத்தாலானவை. கலத்தைச் சூழ கலச் சுவர் காணப்படும். கரு மென்சவ்வு இல்லை. தற்போசணி, பிறபோசணி எனும் பல்வேறு போசனை முறைகளைக் காட்டும்.	(உ-ம்) மியூக்கர், மதுவம், காளான் தனிக்கலமாக அல்லது இழைய அமைப்பில் உள்ளன. கலச்சுவர் உண்டு. இது வைற்றினாலானது. பிறபோசணிகள்	(உ-ம்) இசுப்பைரோகைரா, கிளிமிடோமோனசு தனிக்கலமாக இழைய அமைப்பில் உள்ளன. கலச்சர் உண்டு பச்சையம் கொண்டவை யாவும் தற்போசணிகள்	(உ-ம்) அமீபா, பிளாஸ்மோடியம், இயூக்ளினா தனிக் கலத்தாலானவை கலச்சுவர் இல்லை. இடப் பெயர்ச்சிக் கட்டமைப்புக்களைக் கொண்டவை. பொதுவாக பிறபோசினிகள் விதிவிலக்காக யூக்ளினா ஒளித்தொகுப்பு செய்யும்.	(உ-ம்) இன்புளுவென்சா வைரசு, ஆர்போ வைரசு, HI வைரசு. கல அமைப்பு அற்றவை நியூக்கிளிக்கமிலம், புரத உறையாலானது. உயிருள்ள, உயிரற்ற இரு இயல்புகளையும் காட்டும். யாவும் கட்டுப்பட்ட ஒட்டுண்ணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிகளைப் பெயரிடல்

- அங்கிகளுக்கான சர்வதேச ரீதியான இரு சொற்பெயரீட்டை அறிமுகப்படுத்தியவர் கரோலஸ் லீனியஸ் ஆவார்.
- ஒவ்வோர் அங்கியும் சாதிப் பெயர், இனப் பெயர் எனும் இரு பெயர்களினால் பெயரிடப்படும்.
- பெயர்கள் இலத்தீன் மொழியில் அமைவதுடன் ஆங்கில எழுத்துக்களில் எழுதப்படும்.
- சாதிப் பெயரின் முதலெழுத்து ஆங்கில முதல் எழுத்தாக (Capital) எழுதப்படுவதுடன் ஏனைய சகல எழுத்துக்களும் சிற்றெழுத்துக்க ளால் எழுதப்படும்.
- பெயர்களை கையெழுத்தினால் எழுதும்போதும் நேரான எழுத்துக்களினால் அச்சிடும்போதும் பெயர்களின் கீழ் கோடிடப்படல் வேண்டும். சாய்வான எழுத்துக்களால் அச்சிடும்போது கோடிடப்படாது.

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

01. பூக்களை உருவாக்காததும் கலனிழையங்கள் அற்றதும் மெய்வேர், இலை, தண்டு அற்றதுமான தாவரம் பின்வருவனவற்றுள் எது?

    i. பைனஸ் ii பன்னம் iii. ஈரலுருத் தாவரம் iv. செலாஜினெல்லா

02. எவ்வகை நுண்ணங்கிகளின் ஒன்றிய வாழ்வீட்டத்தினால் இலைக்கன் உருவாகிறது?

    i. பற்றீரியா, பங்கசு ii. பங்கசு, அல்கா
    iii. அல்கா, பற்றீரியா iv. பங்கசு, புரற்றசோவா

03. ஈர்ப்பு வலி நோய் ஏற்படுவதற்குக் காரணமான பற்றீரியா எது?

    i. சிஜெல்லா டிசென்றியா ii. குளாஸ்திரிடியம் ரெற்றனை
    iii. சல்மனெல்லா தைபீ iv. விப்ரியோ கொலரா

04. லினியோசின் பெயுரீட்டின் ஓர் இயல்பாக அமையாதது எது?

    i. ஒவ்வோர் அங்கியினதும் பெயர் இரு பகுதிகளைக் கொண்டிருத்தல்.
    ii. ஒரே சாதியைச் சேர்ந்த எல்லா அங்கிகளும் அப்பொதுச் சாதிப் பெயரினால் விளக்கப்படுதல்.
    iii. விஞ்ஞானப் பெயர்கள் யாவும் ஆங்கில எழுத்துக்களினால் எழுதப்படுதல்.
    iv. ஒரே இனப் பெயர் வேறுபட்ட அங்கிகளுக்கு பெயரிடப்படுதல்.

05. உபாய வாழிகளுக்கும் ஆவேசுக்களுக்குமிடையில் காணப்படத்தக்க ஓர் ஒத்த இயல்பு.

    i. அருவிக்கோட்டு உடலமைப்பு இருத்தல் ii. வெளிக்காது இருத்தல்
    iii. முதுகென்பு இருத்தல் iv. ஈரலிப்பான தோல் இருத்தல்

பாகுபாட்டு ஆட்சி நிரை

இராச்சியம்	(Kingdom)
கணம்	(Phylum)
வகுப்பு	(Class)
வருணம்	(Order)
சாதி	(Genus)
இனம்	(Speices)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமை அகரம்

இயற்கையோடு வாழ்ந்த மனிதன் விஞ்ஞான தொழிநுட்ப முன்னேற்றத்தினால் சூழலுக்கு தீங்கிழைத்தான். சூழல் பாதிக்கப்பட்டபோது தானும் சேர்ந்து பாதிக்கப்படுவதை உணர்ந்து பல்வேறு மாநாடுகள் கூட்டினான். அனைத்து மாநாடுகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

நாம் மாநாடு கூட்டத் தேவையில்லை. பசுமை உலகைப் படைக்க மரம் நடுவோம்; சூழலை நேசிப்போம்; சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்போம். இப்படி இயற்கையை நேசிப்பவரா நீங்கள்? அப்படியென்றால் பசுமை அகரத்திற்கு உங்கள் கட்டுரைகள், ஆக்கங்கள், ஆலோசனைகள், சூழல் நிகழ்வுகளை எழுதி அனுப்புங்கள். பசுமையான உலகைக் கட்டியெழுப்புவோம்.

சுற்றுச் சூழல் எவ்வாறெல்லாம் மாசுபடுகின்றது என்பதை நீங்கள் பட்டியலிட்டுப் பாருங்கள்.

உங்கள் கண் முன்னால் ஒருவர் சுற்றுச் சூழலை மாசுபடுத்த முயலும்போது என்ன செய்வீர்கள்?

உங்கள் சுற்றாடலில் குப்பை, கூளங்களைக் கண்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"பாதையில் மக்களுக்கு தீங்கிழைக்கக் கூடியவற்றை அகற்றுவதும் ஸதகாவாகும்."

இந் நபிமொழியை நீங்கள் இன்றிலிருந்து கடைப்பிடிக்க முயற்சி செய்யுங்கள். உங்களிலிருந்து தொடங்குங்கள்; தொடருங்கள்.

இந்த உலகிற்குப் பயனளிக்கும் வகையில் உங்களால் பங்களிக்க முடியுமா?

சுத்தமான காற்று... சுகந்தமான தென்றல்... குருவிகளின் குரலோசை... பசுமையான மரநிழல்... இவற்றைக் கற்பனை செய்து பாருங்கள். இன்று நீங்கள் அனுபவிக்கும் பசுமையை நாளைய சந்ததிகளும் அனுபவிக்க வேண்டுமல்லவா?

நீங்கள் அருந்தும் தூய்மையான நீரை உங்கள் தம்பி, தங்கைகளும் அருந்த வேண்டுமல்லவா?

சூழலை நேசிக்கும் ஒருவர் கூறினார்:

"முன்பெல்லாம் மழை பெய்வதற்கு என்று ஓர் ஒழுங்கு இருக்கும். முதலில் கரு மேகங்கள் திரண்டு வானம் இருட்டும். பின்னர் வானில் இடி இடிக்கும். மழைத் தூறல்கள் மண்ணில் விழும். சிறிது சிறிதாக மழை அதிகரிக்கும். அந்த மழையை ரசிக்கலாம். அதில் ஆனந்தக் கூத்தாடலாம். சிறிது நனைந்தும் விளையாடலாம்.

ஆனால் இன்று அப்படியல்ல. உங்களை உங்கள் நெருங்கிய நண்பன் வந்து திடீரென அடித்துவிட்டுப் போனால் எப்படியிருக்கும்? இன்று மழையும் அப்படித்தான் இருக்கிறது. கடுமையான வெய்யில் அடித்துக் கொண்டிருக்கும். திடீரென எந்தவிதமான முன்னறிவித்தலும் இன்றி மழை அடித்து ஊற்றும். எமக்கு சீ என வெறுத்துப் போகும். இதற்குக் காரணம் நாம்தான். கண்டபடி காடழிக்கிறோம். காடழிக்காவிட்டாலும் மரங்களை வெட்டுகிறோம். புகையை கணக்கின்றி வெளியேற்றுகிறோம். கழிவுகளை ஒழுங்கின்றி வெளியேற்றி சூழலை மாசடையச் செய்கின்றோம்.

அன்று நாம் சூழலோடு நட்பாய் இருந்தபோது நண்பனாய் இருந்து எம்மை அரவணைத்த இயற்கை இன்று நாம் அதற்குக் கெடுதி செய்யப்போய் எதிரியாய் வந்து தாக்குகிறது."

இது பற்றி நாம் சிந்திப்போமா?

வாருங்கள் பசுமை உலகம் படைப்போம்!

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறேபியரின் தத்துவஞானி அல்கின்தீ (801-873)

பல்துறை விற்பன்னரான அல்கின்தீ ஹிஜ்ரி 185 (801) இல் கூபா நகரில் பிறந்தார். இவர் 'அறேபியரின் தத்துவஞானி' எனப் புகழப்படுமளவுக்கு தத்துவத் துறையில் புலமை பெற்றிருந்தார். இவர் 'அபூ யூசுப்' என்றும் அழைக்கப்பட்டார். இவரை ஐரோப்பியர் 'அல்கின்துஸ்' என அழைத்தனர். கின்தீ கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதாலேயே இவர் அபூ யூசுப் அல்கின்தீ என அழைக்கப்பட்டார். பின்னாளில் அல்கின்தீ என்றே பிரபலமானார். இவர் கூபாவிலும் பஸராவிலும் கல்வி பயின்றார். பின்னர் பக்தாதில் கலீபா அல்மஃமூன் மற்றும் அல்முஃதஸிம் ஆகியோரின் அரசவையில் அறிஞராகப் பணியாற்றி அவையை அலங்கரித்தார்.

எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்ட இவர், பெரும்பாலான கிரேக்க அறிவியல், தத்துவ நூல்களை மொழிபெயர்த்தார். அறபு, பாரசீகம், சிரியம், கிரேக்கம் ஆகிய பன்மொழிப் புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். தத்துவம், கணிதம், இசை, வானியல், மருத்துவம், உளவியல், அரசியல், வளிமண்டலவியல் முதலிய துறைகளில் ஆழமான புலமை பெற்றிருந்த இவர், பல நூற்களையும் எழுதி அறிவுப் பணி புரிந்தார். வானியல் தொடர்பாக 70க்கு மேற்பட்ட நூல்களையும் மொத்தமாக 200க்கு மேற்பட்ட நூற்களையும் அல்கின்தீ எழுதியுள்ளதாகக் கருதப்படுகின்றது.

இவரது 'பீ அல்ஷுஆஆத்' என்பது உடுக் கதிர்கள் பற்றிய கோட்பாட்டை விளக்கும் நூலாகும். 'ரிஸால் பீ இலல் அல்குவ்வத் அல்மன்ஸுபா இலா அல்அஷ்காஸ் அலா ஆலிய்யா அல்தால்லா அலல் மதர்' எனும் நூல் மழையின் அறிகுறிகளுக்கு வழிகோலும் வான்பொருட்களின் செயற்பாடு பற்றி விபரிக்கின்றது. 'ரிஸாலா பில் இல்லத் அல்லதீ லஹா தகூனு பஃழ் அல்மவாழிஃ லா தகாத் தும்தர்' என்ற மற்றொரு நூலையும் எழுதியுள்ளார்.

வளிமண்டலவியல் தொடர்பாக இவர் எழுதிய நூல்களுள் 'ரிஸாலா பீ கவ்கப் அல் துஆபார் மற்றும் 'ரிஸாலா பீ இல்லத் கவ்ன் அல்ழபாப்' என்பவை குறிப்பிடத்தக்கவை.

குவாரிஸ்மி விட்டுச் சென்ற கணிதப் பணியைத் தொடர்ந்தவர் என இவர் புகழப்படுகின்றார். எண் கணிதம் பற்றி 11 நூல்களும் கேத்திர கணிதம் பற்றி 27 நூல்களும் எழுதியுள்ளார். இவரது கணித நூல்களுள் 'ரிஸாலா பில் மத்கல் இலல் அரித்மாதீகீ' குறிப்பிடத்தக்கது.

பௌதிகவியல் தொடர்பாகவும் இவர் பல நூல்களை எழுதினார். அதில் 'ரிஸாலா பீ இக்திலாபில் மனாளிர்' என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒளித் தெறிப்பு பற்றியும் இந் நூலில் விவரிக்கப்பட்டுள்ளது.

இவரது ஆய்வுகளோடுதான் முஸ்லிம்களின் கனிப்பொருளியல் துறை ஈடுபாடு ஆரம்பித்தது எனலாம். இவர் கனிப்பொருளியல் தொடர்பாக 3 நூல்களை எழுதினார். அவை 'ரிஸாலா பீ அன்வாஃ வல் ஜவாஹிர் அல்தமீனர் வல் அஷ்பாஹ்', 'ரிஸாலா பீ நஃத் அல் ஹிஜாரா', 'ரிஸாலா பீ அன்வாஃ வல் ஹிஜாரா வல் ஜவாஹிர்' என்பனவாகும். இந் நூல்கள் பல்வேறு விதமான இரத்தினக் கற்கள் தொடர்பானவை ஆகும்.

தாவரவியல், விலங்கியல் தொடர்பாக 'ரிஸாலா பில் தாகிரில் உன்ஸீ மற்றும் ரிஸாலா பில் தம்ரகில் ஹமாம்', 'ரிஸாலா பில் நஹ்ல்', 'கிதாப் பில் கைல் வல் பைதரா' என்பன குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு அறிவுப் பணி புரிந்த இவர் ஹி 260 இல் மரணித்தார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

காலத்தை வென்றது யார்?

கடிகார முட்களாய்
நிற்காமல் ஓடும் மானிடனே!
காலத்தை வென்றது யார்?

மெழுகுவர்த்தி போல்
கரைந்தோடும் நாட்கள்
இறுதி நாளின் அடையாளமாம்...

உருண்டோடும் நாட்களின்
அர்த்தங்களைக் கற்றிட!
நொடிப் பொழுதிலும்
நன்மைதனைப் பெற்றிட!
யாருக்குத் தெரியும் இறப்பின் முகவரி?
முகவரி பெறும் வரை முடியுமானதை
முயன்று தேடிக் கொள்!

எல்லாம் வல்ல அல்லாஹ்வே
காலத்தை வென்றவன்...

ஆர்.ஆர்.எப். றிப்லா
பு/ கணமூலை மு.ம.வி., மதுரங்குளி

அகரமே!!!

உன்னில் ஏற்பட்ட வளர்ச்சி!
எம் பிஞ்சு நெஞ்சங்களின் மலர்ச்சி!
வரண்ட இதயங்களின் எழுச்சி!
உன்னை வாசித்ததால் எம்மில்
ஏற்பட்டது புத்துணர்ச்சி!
சீரழிந்து வந்த மனிதனை
சீர்திருத்தியதால் ஏற்பட்டது
உனக்கு உயர்ச்சி...
இதுவே உனது கவர்ச்சி...
எம் வாழ்வில் ஏற்பட்டது வரட்சி...
இதற்காய் நீ எடுத்தாய் முயற்சி...
இறுதியில் அவனுக்கே புகழ்ச்சி...

ஷப்னா ஹுசைன், தரம்- 08
வெலம்பொட மு.ம.வி, வெலம்பொட

ஈமானியப் பயணம்

சின்னத் திரைக்குள்ளும்
சினிமாத் திரைக்குள்ளும்
சிக்கிய மண்ணறை வாழ்வாய்
மறக்கடிக்கப்பட்ட நவீன ஜாஹிலிய்யத் இது

திரையிசைப் பாடல்கள்
அந்நியோன்னியமாய் ஆகிவிட்டதால்
இறை மறை வசனங்கள்
நினைவிழந்து போயிற்று

நாப் பேச்சளவில்
நபிகளாரின் சுன்னா
நாகரிகச் சேற்றிசையில் நம்
சமூகம் மூழ்கிற்று

பெஷன் என்ற போர்வையில்
பாவங்களின் அரங்கேற்றம்
விஷம் கொண்ட ஷைத்தான்கள்
வீதிகளில் நடமாட்டம்

அத்தனைக்கும் நடுவே
ஓரிரண்டு உள்ளங்களில் தக்வாவுடன்
ஈமானியப் பயணம் தொடரத்தான்
செய்கிறது- சுவனத்தை நோக்கி...

ரீ.எப். பிரோஸா
அ/ மனாருல் உலூம் ம.வி., கம்பிரிகஸ்வெவ.

என் தாய்

பத்து மாதம் சிறையிருந்தும்
பட்டினியாய் கிடக்கவில்லை
பத்திரமாய் காத்திருந்தாள்
என் அன்புப் பத்தினித் தாய்

துடிக்கும் பருவமதில் - அவள்
கேட்ட மழலை முதல் வார்த்தை
அம்மா என்றிடும்
ஆசையான அன்புச் சொல்

பளிச்சிடும் என் முகம் கண்டு
தினம் கவலை கலைக்கும்
கலைமான் என் - தாயென
மொழிந்திடுவேன் - என்றென்றும்

தாய்மை என்ற சொல்லில்
இத்தனை மகிமையா - என
ஆச்சரியம் கொள்ளும் அனைவர்க்கும்
என் தாயைப் பற்றிக் கூற வந்தேன்
இதோ நொடியில்

எல். அகீலா பானு
பாத்திமா சஹ்றா பெ.அ.க., ஓட்டமாவடி-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப் பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

தயாரிப்பு: எம்.எம். முபாரக், எஸ்.ஐ.எல். முஸம்மில்

வினாப்பத்திரம் I

நேரம் 45 நிமிடங்கள்

பின்வரும் பாடலை அவதானித்து சரியான படத்தைத் தெரிந்து கோடிடுக.

1. பசும் புல்லை மேய்கின்றாய்
பாலைப் பொழிந்து தருகின்றாய்
பார்ப்போர் கண்ணுக்கு
சாந்தமாய் நிற்கின்றாய்

i

ii

iii.

2. நன்றாய் பழகும் தோழன் நீ
நன்றி உள்ள ஜீவன் நீ
திருடனைத் துரத்தும் சூரன் நீ
ஐயறிவான மிருகம் நீ

i

ii

iii

மிகச் சரியாக எழுதப்பட்ட வாக்கியத்தை தெரிந்து கோடிடுக.

3. i. ஓர் ஆமை குளத்தில் வாழ்ந்தது.
ii. ஒரு ஆமை ஒரு குளத்தில் வாழ்ந்தது.
iii. ஒரு ஆமை ஓர் குளத்தில் வாழ்ந்தது.

4. i. யானைகளும் புலிகளும் தாவர உண்ணிகள்.
ii. புலிகள் தாவர உண்ணிகள் அல்ல.
iii. சிங்கங்களும் மான்களும் மாமிச உண்ணிகள்.

பின்வரும் வாக்கியங்களுள் உயர்திணைச் சொற்கள் மட்டும் கொண்ட வாக்கியங்களை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

5. i. குரங்குகள் மனிதர்களைப் போல் நடந்து கொள்ளும்.
ii. சில மனிதர்கள் மிருகங்களைப் போல் வாழ்வார்கள்.
iii. நீதிபதி குற்றவாளியைத் தண்டித்தார்.

6. i. திருடர்கள் வீட்டைக் கொள்ளையடித்தனர்.
ii. பறவைகள் வானில் வட்டமிட்டன.
iii. உழவர்கள் மக்களின் நண்பர்கள். (.......)

ஐந்து சொற்களில் ஒன்று பொருத்தமற்றது. அதன் கீழ் கோடிடுக.

7. தாய், மகன், மருமகன், மகள், தந்தை
8. கீழ், குழி, மேல், அசத்தியம், சத்தியம்
9. அன்பு, பட்டம், கிளிநொச்சி, தீ
10. கண், காது, மூக்கு, வாய், விரல்

11.

i

ii

iii

iv

12.

i

ii

iii

iv

13.

i

ii

iii

iv

14. வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

3	5	7	9	→	8	10	12	14
15	17	19	21	→				

i. 13, 14, 15,17 ii. 20, 22, 24, 26
iii. 10, 11, 16, 18

15.

20	25	30	35	→	12	18	20	22
75	80	85	90	→				

i. 40, 45, 50, 55 i ii. 48, 54, 60, 66
iii. 48, 50, 52, 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நிறுத்தல் அளவைகளை ஒழுங்குபடுத்தி எழுதினால் பெறக்கூடிய ஒழுங்குமுறையைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

i. கிலோ கிராம், மில்லி கிராம், கிராம்

ii. கிராம், மில்லி கிராம், கிலோ கிராம்

iii. மில்லி கிராம், கிராம், கிலோ கிராம்

17. இலங்கையின் கட்டமைப்பை ஒழுங்கு படுத்தி எழுதினால் வரவேண்டியது.

i. கிராமம், மாநகரம், நகரம், பிரதேசம்

ii. பிரதேசம், நகரம், கிராமம், மாநகரம்

iii. கிராமம், பிரதேசம், நகரம், மாநகரம்

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

18. i. A C D E　ii. J K L M　iii. G H S T

19. i. X Y A B　ii. Q R S T　iii. E F U W

20. உருவில் உள்ள பொருட்களுடன் தொடர் புபட்ட செயல் ஒழுங்குமுறை இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.



i. வெட்டுதல், பாதுகாப்பு, தகவல்

ii. தகவல், வெட்டுதல், பாதுகாப்பு

iii. பாதுகாப்பு, தகவல், வெட்டுதல்

21.



i. நேரம், விளையாட்டு, வெளிச்சம்

ii. வெளிச்சம், நேரம், விளையாட்டு

iii. நேரம், வெளிச்சம், விளையாட்டு

பின்வருவனவற்றுள் பிழையான கூற்று எது?

22. i வானவில்லில் ஏழு நிறங்கள் உள்ளன.

ii. இரவு வேளைகளில் வானவில் தோன்றும்.

iii. சூரியன் இயற்கை ஒளிமுதல்.

iv. பகல் வேளைகளில் வானவில் தோன்றும்.

23. i. இலங்கையின் மிக நீளமான நதி மகாவலி கங்கை.

ii. இலங்கையின் மிக உயரமான மலை பீதுருதாலகால.

iii. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி பம்பரகந்த.

iv. இலங்கை ஆபிரிக்க கண்டத்தில் அமைந் துள்ளது.

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

24. பூனை தனது உடலை எவ்வாறு சுத்தம் செய்கின்றது?

i. குளிப்பதனால்　ii. தரையில் புரண்டு

iii. நாக்கினால்

25. கண்டியில் வாழும் பௌத்த மக்களால் வருடாந்தம் கொண்டாடப்படும் விழா.

i. புதுவருடப் பிறப்பு

ii. எசல பெரஹர

iii. சுதந்திர தின விழா

26. மாணவன் ஒருவன் இரவு வானத்தை அவதானித்தபோது வானில் நட்சத்திரங்கள் தென்படவில்லை. அதற்கான காரணம்

i. அன்று மழை நாள்

ii. அன்று பௌர்ணமி நாள்

iii. அன்று அமாவாசை நாள்

iv. அன்று வளர்பிறை நாள்

27. வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைய எவை முக்கியம்?

i. உடல் ஆரோக்கியம்

ii. உள, ஆரோக்கியம்

iii. சமூக சுற்றாடல் ஆரோக்கியம்

iv. மேற்கூறிய யாவும் சரி

28. உடற்பயிற்சியின்போது எது கிடைக்கின்றது?

i. உடல் ஆரோக்கியம்

ii. சுறுசுறுப்புத் தன்மை அதிகரிக்கும்

iii. இதயத் துடிப்பு அதிகரிக்கின்றது

iv. மேற்கூறிய மூன்றும் சரியாகும்

29. கண்பார்வை நன்றாக விருத்தியடைந்து காணப்படும் பறவைகளுள் ஒன்று.

i. காகம்　ii. மீன்கொத்தி

iii. எலி　iv. புறா

30. இனிப்பான சுவையைக் கொண்ட பழங்க ளில் காணப்படும் விற்றமின் எது?

PUBLIC LIBRARY JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. விற்றமின் B ii. விற்றமின் A

iii. விற்றமின் D iv. விற்றமின் E

31. வெய்யில் கூடுதலான காலங்களில் அதிகமாக உண்ணும் பழம்.

i. வத்தகப் பழம் ii. மாம்பழம்

iii. பலாப் பழம் iv. றம்புட்டான் பழம்

32. பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளைப் பெற செல்ல வேண்டியது

i. வைத்தியசாலை

ii. பிரதேச செயலகம்

iii. பொலிஸ் நிலையம்

iv. நகரசபை

33. ஆட்பதிவுத் திணைக்களத்திற்குப் பொறுப்பாக இருப்பவர்.

i. முகாமையாளர் ii. பணிப்பாளர்

iii. செயலாளர் iv. ஆணையாளர்

34. விலங்குகள், மனிதனின் குருதியை உறிஞ்சும் பிராணி.

i. மூட்டைப் பூச்சி ii. தும்பி

iii . வண்டு iv. கரப்பான்

35. 'அ' பகுதிக்குப் பொருத்தமான விடைகளை 'ஆ' பகுதியில் காணப்படுகின்றன. அவற்றை இனங்கண்டு அதன் குறியீடுகளை கட்டத்தினுள் இடுக.

'அ'		'ஆ'
35. களனி கங்கை	☐	ஏடு
36. சூரியன்	☐	ஏழு
37. நெல்லிக்காய்	☐	விற்றமின் C
38. வானவில்	☐	இயற்கை
39. புத்தகம்	☐	கொழும்பு

40. பதினாறு என்பதைப் பிரித்து எழுதினால் வருவது.

i. பத்து+ஆறு ii. பதி+ஆறு

iii. பதின்+ஆறு

41. முள் என்பதை பன்மையாக மாற்றினால்

i. முட்கள் ii. முற்கள்

iii. முள்கள்

42. வெள்ளைக் கொக்கு பெரிய மீனைப் பிடித்தது என்பதில் பெயர் அடைமொழி.

i. வெள்ளை ii. பெரிய

iii. பெரிய, வெள்ளை

43. நீதிபதி அநீதிக்கு .... வணங்காது இருக்க வேண்டும் என்ற வாக்கியத்தில் இடைவெளிக்கு வரவேண்டிய பொருத்தமான சொல்.

i. மூளை ii. தலை iii. வழிபாடு

44. இனம், ஈகை .... என்ற தொடரில் அடுத்து வருவது.

i இன்பம் ii. பெருநாள்

iii. உலகம்

சரியாக எழுதப்பட்ட சொல்லுக்கு கோடிடுக.

45. பயற்றங்காய், பைத்தங்காய், பயத்தங்காய்

46. மரவள்ளி, மரவெள்ளி, மறவள்ளி

47. இயட்கை, இயற்கை, இயற்க்கை

48. 250 கிராம் கடலையின் விலை ரூ. 45.00 எனின், 2 கி.கி. கடலையின் விலை.

i. ரூ. 90.00 ii. ரூ. 150.00

iii. ரூ. 360.00 iv. ரூ. 180.00

49. ஒரு கூடையில் 360 மாம்பழங்கள் இருந்தன. அதில் 1/4 பகுதி பழங்கள் அழுகிவிட்டன. மீதியாக உள்ள மாம்பழங்கள் எத்தனை?

i. 180 மாம்பழங்கள்

ii. 270 மாம்பழங்கள்

iii. 250 மாம்பழங்கள்

iv. 100 மாம்பழங்கள்

50. கலாம் பாடசாலைக்கு தினமும் 8 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். அதில் 1கி.மீ., 300 மீ. தூரத்தை சைக்கிளிலும் மீதியைப் பஸ் வண்டியிலும் செல்வான். அவன் பஸ் வண்டியில் செல்லும் தூரம் எவ்வளவு?

i. 1700 km ii. 6 km 700 m

iii. 6700 cm iv. 7 km 700 m

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப் பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

வினாப்பத்திரம் II

நேரம் 1 மணி 15 நிமிடம்

சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

1. இரண்டு நகரங்களுக்கிடையிலான தூரத்தை அளக்க பொருத்தமான அலகு.

   i. m   ii. cm   iii. km   iv. mm

2. மழை வீழ்ச்சியை அளக்க பொருத்தமான அலகு.

   i. mm   ii. ml   iii. l   iv. cm

3. என்னிடம் 24 மாபிள்களும் எனது தம்பியிடம் என்னை விட அரைவாசியிலும் 5 குறைவாக உண்டு. தம்பியிடம் இருந்த மாபிள்கள் எத்தனை?

   i. 12   ii. 17   iii. 7   iv. 14

4. 40, 18, 50, 22, 60, ... என்ற கோலத்தில் இடைவெளிக்குப் பொருத்தமான எண்.

   i. 26   ii. 70   iii. 28   iv. 30

5. மாணவன் ஒருவன் புத்தகம் ஒன்றில் 3 பக்கம் முதல் 13 பக்கம் வரை வாசித்தான். அவன் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை.

   i. 16 பக்கங்கள்   ii. 10 பக்கங்கள்
   iii. 20 பக்கங்கள்   iv. 11 பக்கங்கள்

6. பாடசாலை ஒன்றில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 240 ஆகும். அதில் 1/4 பகுதியினர் பெண்கள் ஆவர். ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்?

   i. 120   ii. 180   iii. 210   iv. 260

7. தொடர்ந்து மழை பெய்ததால் மரக்கறி வகைகள் அழிந்து விட்டன. இதனால் ஏற்படக்கூடியது.

   i. மரக்கறி வகைகளின் விலை உயர்வடையும்.
   ii. மரக்கறிகள் மலிவு விலையில் கிடைக்கும்.
   iii. மரக்கறி வகைகளை மக்கள் வாங்க மாட்டார்கள்.

கீழே தரப்பட்ட சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

(முகாமையாளர், ஆணையாளர், செயலாளர், பணிப்பாளர், ஆளுநர், தவிசாளர்)

8. பிரதேச செயலகத்திற்குப் பொறுப்பாக இருப்பவர் ....

9. குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்குப் பொறுப்பாக இருப்பவர் ....

10. ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு பொறுப்பாக இருப்பவர் ....

11. வங்கிக்குப் பொறுப்பாக இருப்பவர் ....

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

12. பின்வருவனவற்றுள் அளவில் மிகச் சிறிய வித்து எது?

   i. பயறு   ii. கடுகு
   iii. பலா   iv. தூரியம்

13. கொத்தாகப் பூக்கும் மலர் வகை.

   i. செவ்வரத்தை   ii. அந்தூரியம்
   iii. காட்டு மல்லிகை   iv. அலரி

14. உணவை சுவையூட்ட பயன்படும் தாவர இலை.

   i. அகத்தி   ii. கறிவேப்பிலை
   iii. முருங்கை இலை   iv. அவரை

15. குட்டி ஈன்று இனப் பெருக்கும் பிராணி.

   i. மயில்   ii. ஆந்தை
   iii. குயில்   iv. எலி

16. கருவாட்டில் அதிகம் காணப்படும் போசணை எது?

   i. காபோவைதரேற்று   ii. கொழுப்பு
   iii. புரதம்   iv. விற்றமின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. முருங்கை இலை, பசளி போன்றவற்றில் கூடுதலாகக் காணப்படும் போசணை.

i. காபோவைதரேற்று

ii. இரும்புச் சத்து

iii. விற்றமின் A

iv. புரதச் சத்து

கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொல் எழுதுக.

18. நண்பர்கள் இருவரும் நட்புடன் பழகினர்.

19. இயற்கையின் ஈற்றத்தால் மக்கள் அவதி யுற்றனர்.

20. ஆசிரியர் வினாக்களை தொடுத்தார்.

பின்வரும் சிங்கள வாக்கியங்களுக்கான கருத்தை எழுதுக.

21. வயச கியத ....

22. மல்லி துவன்ன ....

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

உறங்கி இருந்த ஆதவனை
உரத்த குரலில் எழுப்பிட
சிறகை அடித்த சேவலும்
உரக்கக் கூவி நின்றது

விழித்துக் கொண்ட ஆதவனும்
கீழ் வானில் வந்திட
கிழக்கு வெளுத்தது
கீழ் வானும் சிவந்தது

காகம் கரைந்தது
பட்சிகள் பறந்தன
கன்றுகள் துள்ளின
பசுக்களும் அழைத்தன

23. இப் பாடலுக்குப் பொருத்தமான தலையங்கம் ஒன்று தருக.

24. ஆதவனை எழுப்பியது எது என பாடல் கூறுகிறது?

ஆதவன் என்பதற்குச் சமனான கருத்துக்களைத் தரும் மூன்று சொற்கள் தருக.

25. ....

26. ....

27. ....

28. முதல் பாடலில் இடம்பெற்ற பெயர் அடைமொழி ஒன்றைத் தருக.

29. இரண்டாம் பாடலில் குறிப்பிடப்படும் திசை ஒன்றை எழுதுக.

30. பசுவின் ஒலி மரபு யாது?

மூன்றாம் பாடலில் இடம்பெற்ற அஃறிணை வினைச் சொற்கள் மூன்று தருக.

31. ....

32. ....

33. ....

கீழ்வரும் ஆங்கில வாக்கியங்களுக்கான கருத்தை எழுதுக.

34. What is this? ....

35. This is a box. ....

36. பொருத்தமான விடையை வைத்து இடைவெளி நிரப்புக.

(பன்னிரண்டு, வீணை, வரம்புகள், சிறுத்தை, திரிபிடகம்)

37. வயலில் .... காணப்படும்.

38. .... பௌத்த சமயத்தவரின் வேத நூலாகும்.

39. உயிர் எழுத்துக்கள் .... ஆகும்.

40. வேகமாக ஓடக் கூடியவற்றுள் ....யும் ஒன்றாகும்.

பின்வருவம் வினாக்களை அவதானித்து அடுத்து வரக்கூடிய மிகப் பொருத்தமான சொல்லை எழுதுக

41. குடிசை, கீற்று, ... காது, கல்

42. ஆசை, ஈகை, ... ஏணி

43. .... இலை, உரல், கட்டில், நாட்டியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வரும் பூச்சிகளின் பெயர்களை எழுதுக

44.

45.

....

46. ....

சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

47. 200மி.மீ. கொள்ளக் கூடிய கோப்பை ஒன்றினால் 15 தடவைகளில் பாத்திரம் ஒன்றில் நீர் நிரப்பக்கூடிய நீரின் கனவளவு யாது?

i. 300 மில்லி லீற்றர் ii. 300 லீற்றர்

iii. 30 லீற்றர்

வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணைக் கண்டுபிடித்து சரியான விடையின் கீழ் கீறிடுக.

48.

5	13	7
17	3	.....
9	19	11

i. 15 ii. 14 iii. 6 iv. 18

49.

40	45	50
....	30	25
10	15	20

i. 60 ii. 70 iii.35 iv. 100

50. நிழற்றப்பட்ட பகுதி முழு உருவத்தின்,



i. 1/4 இலும் குறைவாகும்

ii. 1/2 இலும் கூடியதாகும்

iii. 1/4 ற்குச் சமமாகும்

51. 

இங்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ள சதுரமுகிகளின் எண்ணிக்கை.

i. 16 ii. 18 iii. 15

52. நல்வாழ்வுக்கு முக்கியமானது எது?

i. இனிப்பான உணவு

ii. குறைவான நித்திரை

iii. உடற்பயிற்சி

iv. அதிகம் உணவு உண்ணல்

53. வாகனம் ஒன்று பயணத்தை ஆரம்பிக்கும் போது வாகனத்தின் மானியில் இலக்கங்கள் பின்வருமாறு பட்டியலிடப்பட்டிருந்தன.

0	1	9	0	9	9	km

வாகனம் மேலும் ஒரு வது தூரம் சென்ற பின்னர் மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக் கூடுகளில் எழுதுக.

						km

எதிர்ப்பாற் கருத்துக்களைத் தருக.

54. ஆசிரியன் ....

55. பாட்டி ....

56. குயவன் ....

இறந்த கால சொற்கள் இரண்டு தருக.

57. ....

58. ....

'எனது அழகான வீடு' என்ற தலைப்பில் நான்கு சொற்களுக்கு குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக.

59. ....

60. ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த ஆரம்பம் சிறப்பான முடிவையே தரும்

Well Begin Half Done

'ஒரு வேலையை சிறப்பாக ஆரம்பித்தால் அதுவே அந்த வேலையின் பாதி முடிந்ததற்குச் சமம்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. சிறப்பான ஆரம்பம் சிறந்த முடிவையே தரும். *1433/2012*ம் ஆண்டு ஆரம்பித்திருக்கும் இத்தருணத்தில் நீங்கள் உங்கள் வேலைகளை Smart ஆக ஆரம்பியுங்கள்.

"இன்றே உங்களால் செய்ய முடிந்ததை ஒருபோதும் நாளை வரை தள்ளிப் போடாதீர்கள்" என்றார் பெஞ்ஜமின் பிராங்ளின்.

"வெற்றி பெற்றவர்கள் எல்லோரும் தம் வேலைகளைத் தள்ளிப் போட விரும்பி, பின்னர் சில காரணங்களால் அவ்வாறு தள்ளிப்போட முடியாமல் போனவர்கள்தான் என நான் உறுதியாக நம்புகிறேன்" என ஷிவ் கெரா என்ற சுயமுன்னேற்றவியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

சிறப்பான ஆரம்பத்திற்காக உங்களைத் தயார்படுத்துங்கள்

ஆபிரகாம் லிங்கன் கூறினார்: "ஒரு பெரிய மரத்தை வெட்டுவதற்கு எனக்கு 4 மணி நேர அவகாசம் தரப்பட்டால் கருவியைக் கூர்மையாக்கி திட்டம் தீட்டி அதற்குத் தயாராவதற்கு 3 மணித்தியாலங்களைச் செலவிடுவேன்."

ஒரு மரவெட்டி 5 ஆண்டுகள் ஒருவரிடம் வேலை செய்து வந்தார். அவரது சம்பளம் உயர்த்தப்படவே இல்லை. ஆனால் புதிதாக வேலைக்கு வந்த மற்றவரின் சம்பளம் மிக விரைவாக உயர்வடைந்தது. இதனால் முதலாவமர் முதலாளியிடம் முறையிட்டார். அவர் கூறினார், "நீ 5 ஆண்டுகளுக்கு முன் எத்தனை மரங்களை வெட்டிக் கொண்டிருந்தாயோ அந்தளவுதான் இன்றும் வெட்டுகின்றாய். நீ அதிகம் மரம் வெட்டினால்தான் அதிக சம்பளம் தர முடியும்."

அவர் தன்னால் முடியுமானளவு முயற்சித்தார். ஆனால் அவரால் வழமையான அளவுக்கு மேல் மரம் வெட்ட முடியவில்லை. இதனால் கவலையடைந்து மற்றவரின் மீது பொறாமைப்பட்டார். பின்னர் புதியவரிடம் சென்று, "உன்னால் எப்படி அதிக மரங்களை வெட்ட முடிகிறது?" என்று கேட்டார்.

"நான் ஒவ்வொரு மரத்தை வெட்டியதும் 2 நிமிடங்கள் ஓய்வெடுத்து எனது கோடரியைக் கூர்மைப்படுத்திக் கொள்வேன். நீ உனது கோடரியை எப்போது கூர்மைப்படுத்தினாய்?" என்று கேட்டார் புதியவர்.

ஒவ்வொரு மரத்தை வெட்டுவதையும் ஒவ்வொரு வேலையாக நினைத்து அவற்றுக்கு சிறப்பான ஆரம்பம் வழங்கிய புதியவரே வாழ்வில் முன்னேறியவர்.

உங்கள் கோடரியை நீங்கள் எப்போது கூர்மைப்படுத்தினீர்கள்...?

"எது அவசியமோ அதைச் செய்யத் தொடங்குங்கள். பிறகு எது முடியுமோ அதைச் செய்யுங்கள். திடீரென்று உங்களால் செய்ய முடியாதது என்று நினைத்துக் கொண்டிருந்தவற்றை செய்ய ஆரம்பிப்பீர்கள்."

"ஒரு வேலையை கனகச்சிதமாக செய்வதையே அல்லாஹ் விரும்புகிறான்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

*1433/2012*ம் ஆண்டில் உங்கள் ஆரம்பம் சிறப்பாக அமையட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

நிக/அபுக்காகம முஸ்லிம் மகா வித்தியாலயம்

அகரம் நல்வாழ்த்துக்கள்!

எப்.எம். பஹீம் (171)
பஸீல்-ஷிபா

எம்.என்.எம். நஸ்மிர் (167)
நஸுர்தீன்-அஸ்முன் றோஸ்

ஏ.ஆர்.எம். றிஸ்மி (166)
அப்துர் ரஹ்மான்-மஹருன்னிசா

ஐ.எப். பர்ஹா (159)
இம்தியாஸ்-பஸ்மியா

எம்.என்.எம். நஷாத் (155)
நௌஷாத்-நுஸ்ரத் ஜஹான்

பீ.எப். அப்ரா (153)
பிர்தவ்ஸ்-றிஸ்லியா

அல்முனீர் வித்தியாலயம்-சம்மாந்துறை

எம்.எச்.எப். சாறா (179)
ஹனீபா-மன்சூறா

எம்.பி.எப். ஹனா (177)
முஹம்மது பஸீர்-ஹபீபா

ஏ.பி.எம். நுஷ்ஹா (167)
ஆதம்பாவா-ஜெஸீமா

எப். நுஹா (156)
சம்சுத்தீன்-ஜெமீனா

மடிகே அனுக்கன மு.ம.வி. கிரி/ கெகுணகொல்ல தே.பா

எம்.ஜே. ராஸிம் (159)
ஜலால்தீன்-சம்சுன்னிசா

எம். றுஷ்தா (158)
பர்ஸானா-மாஹிர்

ஏ.என்.எப். நுஸ்பா (168)
நிஸார்-குப்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Trend



Local:
Single copy: LKR 100.00/-
Annual Subscription: LKR 1400.00/-
6 Months Subscription: LKR 700.00/-

International:
India, Pakistan, Maldives, Singapore: LKR 2000.00
Middle East: LKR 2,200.00
England, New Zealand, Australia, Malaysia, Japan, Korea: LKR 2,400.00
United States: LKR 2,700.00

Contact Hilal at +94 777 849 169

Every month at your doorstep ...

with an assortment of fascinating stuff for the youth, the family, women and children. Presenting ideas & views and interpreting events and developments from a moderately balanced perspective.

#77, Demetagoda Road, Colombo-00900, Sri Lanka.
trendsmonthly@gmail.com | Tel: +94 777 849 169 | +94 11 2689324 | Fax: 2686030
www.facebook.com/thetrendjmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org